ஞானசம்பந்தம்

மலர் 10] விக்ருதி௵ மார்கழி௴ 10—1—51. [இதழ் 2.



✻

ஸ்ரீ ஹரதத்தரும அவர் மனைவியும் சிவ லிங்க பூஜை முடித்து மந்த்ரபுஷ்பம் ஸமர்ப் பிக்கும் சமயம். சிவ தீக்ஷைசெய்து பஞ்சா க்ஷர உபதேசமும் செய்த ஸ்ரீ தக்ஷிணு மூர்த்தி மகாலிங்கத் தினின்றும் வெளித் தோன்றி, அவரையும் அவர் குடும்பத்தையும் தரிசனம்செய்யும் எல் லோரையும் எப்பொ ழுதும் அனுக்ரஹித் துக் கொண்டிருக் கின்றார்.

இவர் பேரின்பம் பெற்றதிருநாள் தைத் திங்கள் சுக்கிலபஞ்சமி யாகும்.

✻

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர் : ச. தண்டபாணி தேசிகர்.
தருமபுர ஆதீனம்.

கடிதம் :

திரு. S. இராமச்சந்திர பத்தர், டிப்டி தாசில்தார், நீடாமங்கலம்.

"இக்காலத்தில் இத்தகைய நூலை உலகுக்கு அளித்த தங்கட்கு உலகமே என்றும நன்றியுடன் வாழ்த்தும். கௌடல்யர், வாத்ஸயாயனர், மாககிவெல்லி போன்ற பேரறிஞர்கள் புருஷார்த்தங்களில் யாதானும் ஒன்றுபறறியே நூல் எழுதியுள்ளார். எல்லா புருஷார்த்தங்களையும் ஒருசேரத் தொகுத்து, ஓரே நூலில் எழுதும் ஆர்வமோ, ஆற்றலோ உள்ள பேரறிஞர்கள் பிறமொழிகளில் இதுவரையில் தோன்றினர் அல்லர். நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் ஒருவரே புருஷார்த்தங்கள் யாவையும ஒருசேரத்தொகுத்து, ஒரு நூலின்கண் எழுதி, உலகுக்கு அளிக்கும் ஆர்வமும ஆற்றலும மிககுவிளங்கியுள்ளார். அஃதேபோல், திருக்குறளுக்குள்ள பல்வேறு உரைகளை ஒருசேரத தொகுத்து இதுவரையில் யாரும வெளியிடவில்லை; ஆங்காங்கு ஒவவொரு உரையே தனிததனியாக வெளிவந்துள்ளது; தாங்கள் ஒருவரே எல்லா உரைகளையும ஒருசேரத் தொகுத்து, ஓர் உரைவளமாக உலகுககு அளித்து, பேரருள் புரிந்துள்ளீர். வாழ்க நின்புகழ்!

'சிநதைக கினிய செவிக்கினிய வாய்க்கினிய'' வாக இதுவரையில் விளங்கிவநத இத்திருக்குறள் இன்று தங்கள் வெளியீட்டின் மூலம "கண்ணுக் கினிய காத்துக்குமே யினிய" நூலாக விளங்குகின்றது. இநநூல் வெளிவரும தொண்டில் தங்களால் ஏடுபடுத்தப் பெற்ற எனது அருமை நணபர், வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகா அவாகள் பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களுடன் சரியாசனமபெறும தகுதியுடையவர் என்பதை மெய்ப்பிததுள்ளார். சைவமும தமிழும தழைததினிதோங்க அருளாட்சிபுரியும தாங்கள் பல்லாணடு வாழ இறைவனை வேணடுகின்றேன்.

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

மாதநதோறும ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் மாத ஜன்மநக்ஷத்திரத் திருநாளன்று சிவஸ்தலங்களில அபிஷேக ஆராதனை செய்துவருதல்போல இமமாதத்திலும 1—1—51 திருநெடுங்களம் என்னும சிவத்தலததில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, பதிகங்களை ஓதுவித்து ஆராதனை முடிவில் "திருநெடுங்களத் திருப்பதிகம" என்ற ஆதீன வெளியீடும அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. திருவெம்பாவையும திருபள்ளியெழுசசியும குறிப்புரையுடனும பதிகக் கருத்துடனும திருவாதிரைத் திருநாள நினைவு வெளியீடாக அச்சிட்டு வழங்கப்பெறறது.

உ

குருபாதம

பொங்கல் பிரார்த்தனை

பொங்கல் தேவி!

செவ்வாழை செங்கரும்பு சேரககட்டி
சேர்வான மஞ்சளொடு இஞ்சிநாட்டி
தைவாழத் தாரணியில் தமிழர்வாழ
தனியாக விழா எடுப்போம் பொங்கல்தேவி!

எங்கெங்கும் இல்லை என்ற பேச்சுமாறி
இனிதுண்ண வாரீர் என்றழைக்கும்நாளும்
மங்காத புதுமை பெற்று மககள்வாழும்
வாழ்நாளும் வரவேணடும் பொங்கல்தேவி!

வெல்லந்தான் இல்லை இன் அடிசில் பொங்க
வெண்பொங்கல் படைககின்றோம விதியைநொந்து
நல்லதொரு காலத்தை விரைவில் காட்டி
நலமபலவே புரிந்திடுவாய் பொங்கல்தேவி!

உழுபவனும் வயிறார உண்ணவேண்டும்
உழைப்பாளி ஊதியமபெற றுய்யவேண்டும
பழுதின்றிப் பாரோர்கள் வாழவேண்டும்
பரிந்துமனம் இரங்கிடுவாய் பொங்கல்தேவி!

எல்லோரும இன்புற்று இருககவேண்டும்
ஏழைகளின் வறுமைநோய் மங்கவேண்டும்
நல்லோர்கள் பல்லோராய்ப் பல்கவேண்டும்
நவில்கினறோம அருள்புரிவாய் பொங்கல்தேவி.!

இயற்றியவர் : வித்வான், திரு. V. S. குருசாமி, தருமபுரம்.

பொருளடக்கம்

		பக்கம்
பண்ணிசையைப்பற்றி ..	...	1
ஐந்தொழில்	...	8
திருவெம்பாவைப் பொருட்சுருக்கம்	...	12
தெய்வ-நீதி	...	18
மூன்று புருஷார்த்தங்கள்	...	22
கடவுள் வணக்கம்	...	28
வான்புகழ் வள்ளுவன்	...	32
தொல்காப்பியம் - கல்லாடருரை	...	95-102
தேவிமான்மியம்	...	61-68

உ

குருபாதம

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்

தருமபுரம், மாயூரம் P. O.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 10] விக்ருதி௵ மார்கழி௴ 10—1—51. [இதழ் 2

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

பண்ணிசையைப்பற்றி ...

சென்னையில் ஒரே இசைமழை. எங்கும் மழையில்லை; விளைவில்லை; ஆறு அவுன்ஸ் எட்டாக—பன்னிரண்டாக, வழியில்லை என்றபேச்சு. ஆனால் சென்னையில் அப்படியில்லை. இசைமழை சென்னையில் எங்கெங்கேயோ கொட்டு கொட்டு என்று கொட்டியது. மக்கள் மகிழ்ச்சியால் கூத்துக்கூட ஆடினார்களாம். அதில் ஒரு பகுதி தமிழிசைச் சங்கம் செய்த தமிழ்ப்பண்ணாராய்ச்சி. பண்ணாராய்ச்சியிலே நடுவுநிலை தாங்கி ஒரு முடிவு காண திரு. R. K. S. அவர்களும், ரசிகமணி திரு. டி. கே. சி. அவர்களும், செட்டிநாட்டரசர் அவர்களும், ஏனைய பிரமுகர்களும் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார்கள். நமது திரு. L. P. K. R. அவர்களும், திரு. J. M. S. அவர்களும் முழுமூச்சுடன் முயன்று எப்படியாவது

தமிழிற்குப் பண்முடிவு கண்டுவிடவேண்டும் என்று வேலைசெய்தார்கள்.

ஆராய்ச்சியாளர்களாக, தேவாரத்திற்கே வழிவழியாளராக வந்தவர்களும், தேவாரத்திற்கே தமது வாழ் நாளை அர்ப்பணித்தவர்களும், தேவாரத்தையே தம் வாழ்நாளுக்காக அர்ப்பணித்தவர்களுமாகிய தியாக புருஷர்கள் பலவேறுபக்கங்களிலிருந்து ஒன்றுகூடியிருந்தார்கள். சென்ற ஆண்டிற்போலவே ஆராய்ச்சி வெகு மும்முரமாக நடைபெற்றது. வந்திருந்தவர்களில் சிலர்—ஆராய்ச்சியை அங்குவந்துதான் தொடங்கிய அறிவாளிகள், தங்கள் முடிவுக்கே எல்லோரையும் அழைத்துப்போய்விடவேண்டும் என்று விடாப்பிடிக் கொண்டவர்கள் சிலர். புண்ணாராய்ச்சியிலே அடிக்கடி பேசி, தேவாரத்தைப்பற்றிய உரிமை தனக்கே பட்டா வாக்கிக்கொள்ளவேண்டும் என்ற தம்நிலையையுயர்த்திக் கொள்ளும் தியாகிகள் சிலர். இப்படியாக ஆராய்ச்சி மும்முரமாக நடந்தது. எல்லாருங்கூடி ஆராய்ந்தார்கள்.

இவைகளைப்பற்றிப் பேசுவதற்கு முன்பு பொதுவான சில எண்ணங்களைத் தமிழுலகிற்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

இசையில் இருவகையுண்டு. ஒன்று மனமகிழ்ச்சியையுண்டுபண்ணிச் சுகானுபவத்தைப் பெருக்குவது. மனோலயத்தை—லயததின் முதிர்ச்சியால் மனோநாசத்தையுண்டுபண்ணி, தெய்வீகத்தன்மை சித்திக்கச்செய்வது என. அவற்றுள்முன்னது உழைத்துக் களைத்தவனுக்கு அமைதியையளித்துக் கவலையை மாற்றும் கருவியாகப் பயன்படுவது. உல்லாச வாழ்வு வாழ்பவனுக்கு உற்சாகமூட்டிப் போகத்தில் மிக ஈடுபடச்செய்வது. இந்த இசையும் மனோலயத்தை வளர்விப்பன ஆனாலும், காபி, டீ, கோககோ முதலியனபோல கிளர்ச்சியை அளித்து

மேலும் போகத்திற் புகுத்துவது. மற்றொன்று இழும் என்ற ஓசையோடு—விழுமியபொருளோடு பாடுகிறவனை யும்—கேட்கிறவனையும் மெல்ல மெல்ல அழைத்துச் சென்று பாடற்பொருளில் பதியவைத்து—பொருளோடு அவனைப் பொருத்தி ஒன்றாக்கி, தன்மயமாகச்செய்வது. இதன் முடிவில் பாடுவானும்—பாடலும்—பாட்டுடைப் பொருளும் வேற்றுமையின்றி—ஒன்றான அத்துவித நிலை உண்டாகும். இந்த இரு இசைகளையும் ஒன்றாக எண்ணுவது-அல்லது ஒன்றுபடுத்த எண்ணுவது அழகா காது. பதினைன்காம் நூற்றாண்டுக் காலத்திலேயே சில புறச்சமயத்தார்கள் இந்த இரண்டு இசைகளையும் ஒன்றாக எண்ணி இசை போகக் கருவி, ஒழுக்கத்திற்கு உலைவைப்பது என்றெல்லாம் வெறுத்தொதுக்கிவந்தார் கள். அவர்கள் போதனை தேவாரப்பண்ணிசைக்குத் தீங்காய் முடிந்தது. அதனால் தேவாரப்பண்களை முறைப் படி இசைப்பார் தக்க அரண் தேடி யலையவேண்டிய தாயிற்று. அந்த அரண்களாக அமைந்தன தருமபுர ஆதீனம், துறைசை ஆதீனம முதலான சைவமடங்கள். எமது தமிழ்ப்பயிற்சிக் காலத்திலே, துறைசையாதீன வித்துவானும், பெரும் புலவர் மணியும் ஆகிய பொன் ஓதுவாமூர்த்திகள் பாடிக்காட்ட பல பண்களைக் கேட் டிருக்கிறோம. அவைகள் தெய்வ இசையாகவே திகழ்ந் தன. அந்தமுறை அவர்கள் வழிவழியாகவருவதென்றும் சொல்லிக் காட்டினார்கள். பூஜாகாலங்களில் அந்த முறையிலே தருமபுர மடாலயத்தில் பாடப்பெற்று வருகிறது.

தேவாரம் வெறும்பாட்டால்மட்டும் கனிவை யுண் டாக்குவதில்லை. பாடுகின்றவர்களுடைய அணி, ஆடை, தோற்றம், பூச்சு முதலியவற்றாலும் ஒரு கவர்ச்சியைத் தந்து, கருத்தைப் பிணித்து, கடவுள் தன்மையை விளக்குவன. பண்ணொன்றப் பாடும் அடியார்களை அப்பராக — சம்பந்தராக — ஆளுடைய அடிகளாகவே

மக்கள் பாவிப்பார்கள். கேட்போர் பாவனையும்—பாடுவோர் பாவனையும்—பாடலின் தெய்வப் பண்ணிசையும் ஒன்றுசேர்ந்து கல்மனத்தையும் கரைத்துக் கனிய வைக்கும்.

இன்றைக்கு அந்நிலைகள்மாறி எப்படியாவது பல மக்கள் விரும்ப வேடந்தாங்குநிலைகளுத் தேவாரப்பண் வந்துவிட்டது என்னலாம். உண்மையில் ஒரு தலத்தில் நடந்த தேவார பாராயணத்தில் இளைய ஓதுவாமூர்த்திகள் இருவர் "மடையில்" என்ற பதிகத்தை டடடாப் பாட்டு மெட்டில் பாடினர்கள். மககளுக்குப் பெரிய மகிழ்ச்சி; அவர்களுககு அமோகமான பரிசுகளும், வரவேற்புக்களும். இந்தநிலையில தேவாரத்தின் பண்ணில் புனிததன்மையை நமது நலத்திற்காகப் பலி கொடுககலாமா என்று அவர்கள் எண்ணிப்பார்க்க முடியுமா? தானுயர வழியார்கின்றவன்—தான் புகழுடைய விருமபுகின்றவன் சமபிரதாய அழிவிற்காகவா வருந்துவான். இப்படியெல்லாம்போய்விடாமல தேவாரப் பண் தெய்வப்பண் முறையிலே இருககவேண்டும என்பது எமது அவா. கர்நாடக இலககண சங்கீதத்தை ரசிப்பவர்கள் குறையாக இருககிறார்களே என்பதற்காக இன்றைய சங்கீதவிதவான்கள் வேடிக்கையாக "திவைத் தாலே" என்ற மெட்டிலும், டடடா மெட்டிலுமா பாடுவார்கள் என்று கேட்கிறோம்.

முற்கூறிய இருவகை இசை முறைகளில் இப்போதுள்ள கர்நாடக இசைமுறை முன்னது. மனேலயத்தை-நாசத்தை யுண்டுபண்ணிச் சாவா மூவாப் பெருவாழ்வு அளிப்பது பின்னதாகிய தேவாரப் பண்ணிசை. இரண்டும் ஒரே ரீதியில் அமைந்திருக்க முடியாது. ஆதலால் பண்களைத் தற்கால கர்நாடக ராகங்களின் அளவைகளாலே அளந்து ஸ்வரப்படுத்தி விடலாம் என்பதும், ஒத்துவராதவைகளை வரிந்துகட்டி

யிழுத்து, அந்தவரம்பிற்குள் நிறுத்திவிடலாம் என்பதும் ஆகிய எண்ணங்கள் மிகமிக எண்ணித்துணிய வேண்டியவை. இசை வகையிலும், தாள வகையிலும் எத்தனையோ வீழ்ச்சிகளும் மாற்றங்களும் நடுவில் ஏற்பட்டு விட்டன என்பது உண்மை. இப்போதுள்ள தாளங்களின் கட்டளை-மாத்திரை-அக்ஷரங்களின் அளவு இவற்றிற்கும் - பழைய தாளசாத்திரங்களிலுள்ளவற்றிறகும் மிகவேற்றுமைகள் காணப்படுகின்றன இன்னும காலம் போகப் போக—பழைமையான நூலகள் நமது புண்ணியத் துணையாற் கிடைக்க நமது இசைமுறையிலும் பழைமையை அறிந்துகொள்ளலாம. அதற்குள்ளாக நாம கர்நாடக இசைமுறையைக கொண்டு தேவாரப் பண்ணை அறுதியிட்டுவிடுவோமேயானால தேவாரப்பண்ணாராய்ச்சிககுத் தீங்கிழைத்தவர்களாகவே ஆவோம. ஆதலால் செவியுணர்ச்சி ஒனறையே குறிககாமல் தெய்வப்பாடல் எனபதைச் சிந்தையிலிருத்திப் பழைமையான முறையிலேயே அமைத்துககொளவதே பழம் பண் முறைககு ஏற்றதாகும்.

இப்படி இருவங்க இசைகளையும் ஒன்றுபடுத்தி ஆராயககூடிய நிலையில் கொணடுவந்து விட்டவர்கள் இன்றைககுத் தேவாரப்பண்ணிசைககும ஓதுவார்களே! மூலபண்டாரம் வழங்கும முதலவன் பாட்டை முற்றத்துப் பாட்டாககினர்கள். தெய்வ இசையைத் தெரு இசையாக்கினர்கள். திருநீறுங்கண்டிகையுந் திகழப்பாடிவந்தவர்கள், மினுககுமாவும்—சாயப்பொட்டும்—நீளச்சங்கிலியும் இட்டுப் பாடத்தொடங்கினர்கள். தேவாரபாராயணம என்ற பெயரைமாற்றிக கோஷ்டியாககிக - தேவாரக் கச்சேரியாககினர்கள. பாராயணம என்பதில் இழிவு போல அவர்களுககுத தோறறியதுபோலும், அதனால கச்சேரிப்பாட்டானி, உண்மைவடிவம மறைந்து, உருப்படிகளாககி, கர்நாடக சஙகீதத்தில் கலகக ஆரமபித்து

விட்டது. இந்தமுடிவே நிலைப்படுமானால் தமிழ்ப்பண்—தேவாரப்பண் என்பதெல்லாம் மறைந்துவிடும் என்று எச்சரிக்கிறோம்.

இந்த முயற்சியில் ஈடுபடுகின்றவர்கள் தெய்வ நம்பிக்கையும்—அடியார்களின் ஆற்றலும் அறிந்தவர்களாகவே இருப்பார்கள் என்ற துணிபால் ஒன்று விண்ணப்பித்துக்கொள்ளுகிறோம். முதலில் யாழில்வைத்துப் பண்ணமைத்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். பின்னர் அவர்மரபில்வந்த ஒரு பெண். அவள வகுத்ததும் அம்பலவாணன் அருளாணைபெற்று என்று வரலாறு கூறுகிறது. அவள் வகுத்தபோது இத்தகைய ஆரவாரப் பேச்சுகளும் தனமுனைப்பும் இருந்ததாக—அவள் வகுத்ததை மற்றவர் ஏற்க மறுத்ததாக—புறம் போயாவது அவளகூற்று இப்படி இவர்கூற்று இப்படி என்ற பேச்சுப்பிறந்ததாக அறிகிறோமா? இல்லையே? அதுபோல உண்மைககு மறுப்பும் இல்லை; ஆராய்ச்சியும் இல்லை. ஆதலால் நம்மறிவில் மதிப்புவைககாமல் முடிபுகிடைக்குமபோது பெறுவோம்; இதுவே முடிபல்ல. இதுவே எந்த ஆராய்ச்சிக்கும் இலககணம் என்ற எண்ணத்தோடு இடைவிடாது சிந்திப்போமானால் சிந்தனை ஒத்த இடம் முடிவாகும.

ஒரு காலத்தில ஒரு பெண் வகுத்த இசையை ஏன் ஒரு ஆண் வகுககக்கூடாதென்று கேட்கலாம். தனதறிவிற்கே மதிப்புகொடுத்து அதன முடிவே முடிவு என்பவர்களின் முடிவைப் பற்றிக் கவலை இல்லை. அந்தப் பெண்ணின் நிலையை நாம் எண்ணிப் பார்கக வேண்டும். உலக வழககத்திலுங்கூட பொருளால் புத்தியால் பதவியால்பட்டத்தால் உயர்ந்தவர்களைச் சாதாரண மக்கள் தங்களோடு சமமாக எண்ணுதல் கூடாது என்று நீதிநூல் வகுக்கிறதே அங்ஙனம் அருளால உயர்ந்தவர்களைச் சமமாக எண்ணுதல் தகுமா? அங்ஙனமிருக்க

அருள் துணைகொண்டு அவர்கள் வகுத்தமாதிரியே புத்தி பலத்தைக்கொண்டு நாமும் செய்து விடுவோமென்று எண்ணுவது புலியைப் பார்த்துப் பூனை சூடிக்கொண்ட கதையாகத்தான் முடியும். உங்களுடைய ஆராய்ச்சி களும் அதன் முடிவுகளும் அறிவைத் துணைக்கொண்டு செய்யப்பட்ட இலக்கியங்களுக்கல்ல. அவனருளே கண்ணாகக்காணும் அருட்பாடல்களுக்கு என்பது நினை விருக்கட்டும்.

ஆண்டுக்கொருமுறை கூடியாராய்வதைக் காட்டிலும் இந்தக்கருத்தை மனத்தில் ஊன்றி ஆராய்ந்து கூறும் தடைவிடைகளான முடிபுகளையும் மாதந்தோறும் எழுதக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள்-உரைவளம்.

அறத்துப்பால்

நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர்கள் வரலாறு, ஆராய்ச்சிக்குறிப்புகள், சொல்லகராதி இவைகளும் சேர்க்கப் பட்டுள்ளன.

கனம் பக்தவத்ஸலம், டாக்டர். சண்முகஞ் செட்டியார், ரஸிகமணி டி. கே. சி, டாக்டர். சிதம்பரநாதச் செட்டியார் ஆகியோர்களின் மதிப்புரைகளும் இணைக்கப்பெற்றுள்ளன.

உரைப்பகுதி, உரைவிளக்கப்பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி, என்ற நான்கு பிரிவுகளில் உரைவளம் அமைந் துள்ளது. (கிரவுன்சைஸ் 568 பக்கங்கள்)

ரெக்சைன் பைண்டு விலை ரூ. 6—0—0
தபாற்கூலி முதலியன ரூ. 1—0—0

விலாசம்:- K. பாலநாதன்
செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்
தருமபுரம், மாயூரம் P. O.

ஐந்தொழில்

[வித்துவான், திரு. க. சம்பந்தனார், கடலூர்.]

1. படைத்தல்

'காரிட்ட ஆணவக கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டிருந்த' உயிர்களை உற்றுநோககிய கடவுள இரக்கப்பட்டு அது காரணமாகவே, ஆணவத்தளையை நீகக முயலுகிறார். இந்நிலையில் கடவுள் ஒரு மருத்துவராகின்றார்: ஏன்? அவர் வைத்தியநாதரல்லவா? மணிவாசகர் இதனை "வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று போது நான் வினைக் கேடன் என்பாய்போல, இனையன் நான் என்று உன்னை அறிவித்து என்னை ஆட்கொணடு எம்பிரான்" என அழகுபடச் சித்திரிக்கின்றார். கருணைகாரணமாக உயிர்கட்குள்ள வினைகளைப் போக்க உலகைப் படைகிறார். தன் தமருகம் தங்கிய கையோடு அவர் ஆடுங்கால் தமருகம ஒலிககின்றது. அதனின்றும் நாதம் எழுகிறது. நாதமே பிரபஞ்சத்தோறறத்திற்குக காரணம். இநத நாதத்திலிருந்து விந்து, கலை முதலிய தோன்றுகின்றன. இப்படியே, ஒவ்வொரு தத்துவமும் தோன்றுகின்றன. பின் மண், நீர், தீ, வளி, வெளி உண்டாகி இவை கலந்த மயககமே உலகமாகின்றது. இப்படி ஒன்றிலொன்று சங்காரகாலத்தில் ஒடுங்கிகிற்கின்றன.

கடவுள் தமருககையால் உலகைச் சிருஷ்டிக்கும் முறையை எளியவரும அறிய, சைவத்திருககோயில்களில் மகோற்சவ காலங்களில முதற்றிருவிழாவில் நடைபெறுவதைக காணலாம. மற்றை விழா நாட்களில் கடவுள் உலகைக காககின்றார் என்ற உண்மை புலப்படும். இரதோற்சவத்தன்று சங்காரமுறையைக காணலாம்.

அடுத்து நடைபெறும் உற்சவம் மௌனோற்சவம் எனப் படும். இதுதான் மறைத்தல் என்ற கிருத்தியமாகும். இதற்கடுத்து நடராஜர் வந்து அருள்புரிகிறார். இவைகளையே ஒரேமூர்த்தமாகிய நடராஜர் உருவில் காண்கின்றோம்.

இனிச் சிலர் கடவுள் ஏது? படைப்பேது? என்கின்றனர். ஆம்! உண்மை! சிற்றறிவிற்கு எட்டாத பேரறிவுடைய பெரும்பொருளை இல்லையென்பதினும் வேறு அறியாமை இல்லை. மனிதன் முதலில் தன் முகத்தையும், தன் முதுகினையும் நேரடியாகப் பார்க்க முடியாத நிலையிலிருக்கிறான். பிறபொருளின் உதவியின்றி மனிதன் பார்க்கமுடியாது. அங்ஙனமிருக்கவும் தன்னின்வேறானதாகியும, தனனொடுகலந்தும 'அங்கிங் கெனாதபடி எஙகும பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி அருளொடுநிறைந்த பரமபொருளை' ஊனககண்கொண்டு காண இயலுமோ? முடியாது. அன்றியும், அவனன்றி இவ்வுலகை யாரால்தான் உண்டாககமுடியும. நீரை உண்டாககியதார்? நெருப்பை உணடாக்கியதார்? மலைகளை—காட்டை உண்டாககியதார்? அவனருளால் அல்லவா அந்தரத்து அகிலகோடி தாழாமல் நிலைநிற்கின்றன. சாதாரணமாக ஒரு பூவினை ஒருவனால் உண்டாக்கமுடியுமா? அழகு, குணம், மணம், தேன், மென்மை, புற இதழ், அக இதழ், மகரந்தம், அதனையுடைய பொகுட்டு, பிற மகரந்தம் கலக்கக் காய் உண்டாம் நிலை, இன்ன பிறவற்றுடன் கூடிய மலர் ஒன்றை ஒருவனால் உண்டாகக முடியுமா? முடியாதே. இப்படிப்பட்ட வனப்புமிகக மாபெரும உலகினைக காணும்போது இதனை உண்டாககியவன் ஒருவன் இருத்தல் அவசியம என்பது புலப்படவில்லையா? அவன் அருளின்றித் தானாக மழைபெய்து, தானாகப் புல்பூண்டு முதலிய ஜீவராசிகள் உண்டாகின்றன என்று எண்ணுவது தவறு. காணப்பட்ட உலகம் அவனால்தான்

உண்டாக்கப்பட்டது. ஆனால் அவனைக் காணமுடியாது. காணலாம்; அவன் கருணைபுரிவானேல் அவன் காட்ட நாம் காண்போம். "காண்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாககாலே" என்பது அருள்வாக்கு அல்லவா!

ஆகவே காணப்பட்ட உலகைக் கண்டு அவன் உண்டு என்பதையும், அவனுற்றான் இவ்வுலகமும் படைக்கப்பட்டது என்பதையும உணர்தல்வேண்டும். அந்த அறிவுணர்ச்சி ஏற்படுதல் அவசியம. ஏற்பட்டால்தான் நாம் கற்றவர்களாவோம். இவ்வுண்மை திருவள்ளுவர் குறளில் விளககப்பட்டுள்ளது. கடவுள்வாழ்த்தில் முதல் குறளில் கடவுள் உண்டு என்பதையும், இரண்டாம் குறளில் உண்டென்ற உணர்ச்சியுடன் அவனை வணங்குதல் அவசியம் என்பதையும, வணங்கினுற்றான் நாம் படித்தவர்களாவோம் என்பதையும் திருவள்ளுவர் அறிவுறுததியுள்ளார். காரைக்காலம்மையுங்கூட 'பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல், சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்' என்ருர். ஆகவே கடவுள் உண்டென்பதையும், அவரால்தான் இவ்வுலகமும் படைக்கப்பட்டது என்பதையும உணர்தலவேண்டும்.

2. காத்தல்

'மரம்வைத்தவனுக்குத் தெரியும் தண்ணீர் ஊற்றுவதற்கு' என்பார்கள் கிராமத்தில். அது உண்மை. கடவுள் கருணையால் உலகைப் படைத்தார்; படைத்தவர் கருணைகொணடு காககிருர்; அவருடைய அமைத்த திருக்கரத்தால இக் காத்தல் தொழில் நடைபெறுகின்றது. பிறவிககடலில் மூழ்கிக் கரைகாணுது திகைககும ஆன்மாக்களைப்பார்த்து, அஞ்சாதீர்கள் என்று அபயமளித்து, ஆன்மாககளின் ஊழ்முறைப்படி இன்ப துன்பங்களை ஊட்டுகிருர். அவர் அங்ஙனம் தாய்போலிருந்து ஊட்டா

விட்டால் குழந்தைகளாகிய நாம் மெய்யறிவு பெறு வோமா? அல்லது அவர் காத்தல் தொழிலைச் செய்யா விட்டால் ஊர் எங்கே? நாடு எங்கே? நகர் எங்கே? உயிர்கள் வாழ்வுதான் எங்கே? இந்த இடத்தில்தான் கடவுளின் படைப்பும், காப்பும் ஒன்றை ஒன்று பின்னிக் கொண்டுள்ளன. கடவுள் எல்லாவுயிர்களும் தத்தம் அறிவு நிலைகளுக்கும் உடலமைப்புகளுக்கும் தக்கவாறு உலகப் பொருள்களை உண்டு உயிர்வாழ உணவுப்பொருள், காடு, மலை, அருவி, சோலை, ஐம்பூதம், மொழி, ஒளி கொடுக்கும் ஞாயிறு, திங்கள், நீரளிக்கும் மேகம் இன்ன பிறவற்றையும் படைத்தார் என்றால் என்னே அவர்தம் கருணை! உயிர்கள் துன்பநிலை நீங்கி இன்பநிலை அடைய உடல்கொடுத்தார்; அறிவுகொடுத்தார்; நுகர்பொருளை யும் அளித்தார். இத்துணையும் தந்தவர் நம்மைக் காத்தும வருகின்றார். இப்பேருபகாரியை—கைம்மாறு கருதாக கடவுளை நினைககவேண்டாமா? வாயார வாழ்த்தவேண டாமா? உடலார வணங்கவேண்டாமா? மனமொழி மெய்யால் இத்தகைய கடவுளை வணங்காவிட்டால் கற்ற தனாலாய பயன் என்கொல்? இவ்வுடலுறுப்புக்கள் தாம் என்ன பயன்பெற்றனவாம்? திருவள்ளுவர் இதனை நன்கு விவரிக்கிறார். அக்குறள்,

"கோளில் பொறியில் குணமிலவே; எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்பதாகும். ஆகவே இறைவன் அமைத்த கரத்தால் உயிர்கட்கு அவைகளின் ஊழ்வினைப்படி நுகர்பொருள் களைக் கூட்டுவித்துப் பயம்போகககி காத்துவருகிறார். தாயினும் மிக்க அன்புடன் காக்கிறார்.

(வரும்)

திருவெம்பாவைப் பொருட்சுருக்கம்

[திரு ச. தண்டபாணி.]

மாணிக்கவாசகசுவாமிகள் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கிறார்கள். எழுந்தருளியிருந்த காலம் மார்கழிமாதம். இம்மாதம தேவர்களுக்கு விடியற்காலை என்று பேசப்பெறும். விடியற்காலமே ஒய்வு எடுத்துக் கொண்ட உயிர்கள் உற்சாகத்தோடு எழும்பும் காலம்; உணர்வுதெளிந்த காலம; உடல் உழைப்பிலும் உள்ள உழைப்பிலும் கிளர்சசி ஏற்படும் வளர்ச்சிககாலம்.

நாம பெருநோககாகக காணுமிடத்து விவசாயிகள் உழைத்தபயனைப் பசும்பொன் பரப்பினாற்போலப் பசுங் கதிர் பழுத்து அறிவிககும காலம்; தைபிறந்ததும அப்பயன் வீட்டுககுவர வழிபார்க்கும் காலம; இங்ஙனம் ஆத்மீகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், உலகியலதுறையிலும விடியுங்காலமாகிய மார்கழியில், மகளிர் நாட்காலையில் எழுந்திருந்து வீடுவாசல்களை மெழுகிக் கோலமிட்டுப் பூப்பரப்பி, விளககங்கண்டு பொய்கைககு நீராடப் போகின்றார்கள்.

1. [முதல்நாள் இரவிலேயே மகளிர் எல்லோரும் ஒன்றுகூடித் தமககுள் நானேவந்து எழுப்புவேன் நானேவந்து எழுப்புவேன் என்று போட்டியிட்டுக கொண்டு படுக்கச்சென்றவர்கள் உறங்கிப்போக, ஒருத்தி எழுந்திருந்து அடுத்தவள் வீட்டுககு இறைவன் புகழை இனிமையாகப் பாடிககொண்டு சென்றாள். பாட்டொலி கேட்டும், அந்தவீட்டுககாரி எழுந்தாளில்லை. அப்போது இவள்] 'இவ்வொலியைக கேட்டு இன்னமுமா மெய் மறந்து பெருமூச்சு விட்டுக்கொணடு பூப்படுககையில் புரண்டு புரண்டு தூங்குகின்றாய்! இதுவா உன் இயல்பு! என்றாள். [இடித்துரைகேட்ட அவள் எழுந்து வந்து இவளுடன் சேர்ந்துகொண்டாள்.]

2. [மற்ருெருத்தி கடவுள்மேல் கனிந்த அன்பு என்று சொல்லிக்கொண்டவள் உறங்கிக் கிடந்தாள். அவள் வீட்டையணுகிய இவர்கள்,]

'அம்மா அலங்காரச்செல்வி' படுக்கையில நேசமோ?'

[உள்ளிருந்த மாது] 'சீச்சீ!'

'எங்களை ஏசுவதற்கு இதுதானு இடம்? சுமமா விளையாடாதே. யாம் அனைவரும் தில்லைச் சிற்றம்பலத் தானுககு அடிமைகள். வா சீககிரம.'

3. 'முத்தநகைப்பெண்ணே! அத்தன் ஆனந்தன் என்று வாயொச்சில் ஒழுகப் பேசுகின்ருய்! வெறும் பேச்சு வேண்டா. வந்து வாசலைத் திற'

'ஆமாம. நீங்களெல்லாம் மிகமிகப் பழைய அடியார்கள். நாங்கள் புது அடியார். எங்களையும உங்களோடு சேர்த்துககொள்ளுங்கள்.'

'ஆகா உன் அன்பு எங்களுககுத தெரியாதா? மனச்சுத்தமும் அன்புமுடையவர்கள் சிவனைப்பாடமாட்டார்களா? இவ்வளவு வசவும் எமககு வேண்டியதுதான்.'

4. [மற்ருேரில்லது வீட்டுவாயிலில்] 'அம்மா! இன்னும் பொழுதுவிடியவில்லையா?'

[உள்ளே இருந்து ஒருகுரல்] 'வண்ணக் கிளிமொழியார் எலலோரும வந்துவிட்டார்களோ?'

[வெளியிலுள்ளார்] 'எண்ணிக கணககுப்பார்த்துச் சொல்லுகிருேம்.'

[மற்ருெருத்தி] 'கண்ணுககினிய கடவுளைப் பாடிக் கசிந்து மனம உருகியிருப்பதால் எங்களால் எண்ணிச்

சொல்ல முடியாது; நீயேவந்து எண்ணிப் பார்த்துக் குறைந்தால் மீட்டும்போய்த் தூங்கு.'

5. [மற்ெறாரு தோழியின் வீட்டுவாசலில்] பிரம விஷ்ணுக்களால் அறியமுடியாத கடவுளைக் கண்டது போலப் பேசும் கனிந்த சொல்லையுடைய கள்ளீ! வாசலைத்திற; நாங்கள் சிவனே சிவனே என்று ஓலமிட்டாலும் நீ எழுந்திருக்கமாட்டேன் என்கிறாய்? இதுதானா உன் யோக்கிதை?'

6. [அடுத்த தோழிவீட்டுவாசலில] 'அம்மா! நேற்று எல்லோருக்கும் முன்னே வந்து உங்கள் எல்லோரையும் எழுப்புவேன் என்ற வார்த்தை எந்தத் திசையில் பறந்தது? இன்னும பொழுது விடியவில்லையா? கடவுள் கழலைப்பாடி வந்த எங்களுக்குக் கொஞ்சம் உன்வாயைத் திறவேன்! பிராணைப்பாடேன்.' [பிறகு அடுத்த வீட்டின் வாயிலை அடைந்தார்கள்.]

7. 'அம்மா! தாயே! சிவனுடைய சின்னங்கள் கேட்கின்றனவே! சிவா என்று கொட்டாவி விடுகிறாய்; தென்னா என்பதறகுமுன் தீசேர் மெழுகாய் உருகுகிறாய். அப்படிபட்ட நீ இப்பொழுது நாங்கள் எல்லோரும சேர்ந்து என்னரையன் இன்னமுதன் என்று சொல்லுகின்றோம்; இன்னந் தூக்கமா? கல்மனக கள்ளர்களைப் போலக கிடக்கின்றாயே, அமமா! உன தூக்கத்தின் யோக்கியதை இப்படியா!'

8. [சிறிதுதூரம் சென்று மற்றொரு வீட்டுவாயிலில்] 'அம்மா! கோழி கூவுகின்றது. குருகு ஒலிக்கின்றது. வாத்தியங்கள் முழங்குகின்றன. சங்கத்தொனி காதைத் துளைக்கின்றது. நாங்கள் அனைவரும் பரங்கருணைப் பரம் பொருளைப் பாடுகின்றோம்; ஏடி! உனக்குமட்டும் என்ன உறக்கம்; வாயிலைத்திற.' [அப்படியே கதவைத்திறந்து கொண்டு அவளும் வருகிறாள்.]

[அவளைப்பார்த்து] 'உம்......ஊழிமுதல்வனை ஏழை பங்காளனை நீயும் பாடு!'

[எல்லாரும் விழித்துவந்து ஒன்றுசேர்ந்தபிறகு வியப்புடன்]

9. 'பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் இருக்கின்ற பெருமானே! உம்மைத் தலைவராகப்பெற்ற நாங்கள் அடியார்களுக்குஅடிமையாவோம்; அவர்களே எம் கணவர்கள்; அவர்கள் விரும்பியபடி அடிமையாய்ப் பணிசெய்வோம்; இத்தகைய வரங்களை எமக்குத் தேவரீர் அளித்துவிட்டால் எங்களுக்கு ஒரு குறையும் இல்லை.'

10. பெண்பிள்ளைகளே! பாதாளத்தின் கீழ் சொல்ல முடியாத இடத்திலே அவன் பாதமலர் இருக்கின்றது. அவனுடைய முடியோ எல்லாப் பொருளுக்கும் முடிவானது. உடம்பில் ஒருபக்கம் ஆண்; ஒரு பக்கம் பெண். வேதோபநிஷத்துக்களும், தேவர்களும், முனிவர்களும், மனிதர்களும விடாமல தோத்திரித்தாலும, வற்றாத புகழுடைய தோழனுகத் தொண்டர்களுக்கு நடுவில் இருக்கின்றான. அவன் ஊரென்ன? பேரென்ன? உறவு யார்? அயலார் யார்? அவனை எப்படிப் பாடுவது?'

11. [அவர்கள் குளக்கரை அடைந்து நீராடிக் கொண்டே] 'வழியடியார்களாகிய நாங்கள உய்ந்தோம். வாழ்ந்தோம. அண்ணாமலையானே! உணணுமலைபங்கா! உன்னுடைய ஐநதொழில விளையாட்டினால் உய்யும் வகையில் உய்நதோம். அடியேங்களைத் தப்பவிடாமல் காப்பாற்றும்.'

12. [நீராடுகின்ற ஒருத்தி, மற்றொருத்தியைப் பார்த்து] 'அம்மா! பிறவித்துன்பம்கெட, ஆனந்தக் கூத்தன் ஐந்தொழிலாற்றலின் அருமைப் பாட்டினைப்

பாடிக்கொண்டு வளையல்கள் சலகலென, மேகலைகள் சலசலெனக் கூந்தலின்மேல் வண்டுகள் ரீங்காரம் செய்யச் சிவசிந்தனையோடு நீராடு.'

13. [மற்றொருத்தியைப் பார்த்து] 'பைங்குவளை, செந்தாமரை, குருகினம், அரவம் இவைகளை யுடைமையாலே, அண்ணாமலையாரையும், உண்ணாமுலையம்மையையும் போலிருக்கும் இந்தக் குளத்தில் வளையலும் சிலம்பும் ஒலிக்கக் கொங்கைகள் பொங்கத் தண்ணீர் அலைமோத நீ ஆடு.'

14. [ஒருத்தி கூட்டத்தைப்பார்த்து] 'காதணியாட ஆபரணங்கள் ஒலிக்க, மாலை அசைய, வண்டுக்கூட்டங்கள் ஒலிக்க நீராடுவோம்; சிற்றம்பலத்திலுள்ள அற்புதக் கூத்தன் அடிமலர் பாடுவோம்; அருட்சத்தியாய் நம்மை ஆட்கொண்ட அம்மையின் அடிமலரைப்பாடுவோம்.'

15. [ஒருத்தியைப்பார்த்து மற்றவர்கள்] 'ஒவ்வொரு தடவையும் நம்பெருமான் நம்பெருமான் என்று ஓயாது சொல்கின்றாள். ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றாள். பிறதெய்வம் தொழாதிருக்கின்றாள். இவ்வாறு அண்ணாமலையான் பித்துப்பிடிக்க இவளை ஆக்கிய அவர் திறத்தை நாம் பாடுவோம்; நீராடுவோம்.'

16. [மழையை நோக்கி மகளிர் கூறுகின்றார்கள்] 'மழையே! நீ பராசக்தியின் திருமேனியைப்போல வானத்தில் கருமையாக எழுந்து, சிற்றிடையைப்போல ஒலித்து, புருவத்தைப்போல விலவளைத்து, இறைவன் திருவுளத்தின்படி நமக்குப் பொழிகின்ற அருளைப் போல மழையினைப் பொழிக.'

17. 'கூந்தல அழகிய பெண்ணே! திருமாலும் பிரமனும் பிறதேவர்களும் அடையமுடியாத இன்பம்

நம்மிடம் உண்டாக, நமது இருப்பிடங்களுக்கு எழுந்தருளித் திருவடிதந்தருளும் சேவகனைப்பாடிப் பங்கயப் பூமபுனல் ஆடுவோம்'

18 'பெண்ணே! அண்ணாமலையாரைத் தரிசிக்க வரும் தேவர்களின் முடிமணி தன்னொளி இழந்தாற் போலச சூரியனை மேகஙகள மறைககக, நக்ஷத்திரங்கள் வானமண்டலத்தை விட்டகல, ஐம்பூதங்களாய் ஆணாய்ப் பெண்ணாய் இவைகளலலாதனவுமாய் இருககின்ற இறைவன் திருவடியைப் பாடிப் பங்கயப் பூமபுனல் ஆடுக.'

19. 'இறைவா! உனகையிற்பிள்ளை உனக்கே அடைககலம் என்ற பழமொழியைப் புதுமொழியாக்கும் அச்சததால், திருமுன ஒரு விணணப்பம்; எம்முடைய கொஙகை அடியாரல்லாதார் தோளைச் சேராதொழிக. கைகள் உமது பணிககு ஆகுக. எமது கண்கள் தேவரீர் திருமேனியைக காண்க. இந்த வரங்களை எமககு அளித்து விட்டால் சூரியன் எங்கே உதித்தாலும் எங்களுக்கு என்ன?'

20. 'எல்லாவுயிர்களுககும் ஆதியாய், அந்தமாய், தோற்றுமிடமாய், பெருமபோகங்கள் விளைவிப்பதாய் முடிவிடமாய், பிரமனும் திருமாலாலும காணமுடியாத பெருமையனவாய், எம்மையெல்லாம் ஆட்கொள்ளும் பொற்றாமரை யடிமலர்களைப் போற்றுகின்றோம். போற்றி மார்கழி நீராடுவோம்.'

தெய்வ-நீதி

[O. S. பாலு.]

அங்கம் 1.

அன்று மதுரை நகரின் வணிகர் வீதியிலே, ஏற்பட்ட ஆரவாரம்! சந்தோஷம்! பூரிப்பு! இன்னும் என்னென்னவோ! இவ்வளவிற்கும் காரணம், பணம் படைத்த தனபதியின் இல்லத்திலேதான் இவ்வளவு உபசாரமும். ஏன்! குழந்தையற்ற குடும்பத்தில், விதவையின் கோலத்திலிருக்கும் தன் தங்கையின் ஒரே மகனைத் தனபதி ஸ்வீகாரம் எடுத்து கொண்டான்.

ஸ்வீகார தினத்தன்றுதான் அவன் வீட்டில் அவ்வளவு ஆரவாரமும், ஆட்டமும், பாட்டமும், அன்பும், ஆசையும், சந்தோஷமும் சிலவருடம்தான்:—

ஆசையும், அன்பும், அகன்று விட்டது. வாயும் மனமும் குளிர, ஆயிரம் தடவை அண்ணா என்று அன்புடன் அழைத்த தங்கை, இன்று அடியோடவே மாறிவிட்டாள். ஏன்! பொறாமையின் வேகம், பலரூபத்தில் அவளிடம் தலைவிரித்தாடியது. ஆத்திரத்தின் எழுச்சி ஒரு நாள் அவளையும் மீறி வெளிப்பட்டு விட்டது.

அன்று மாலை. வாடா! கண்ணே! என்று அன்புடன், [தன் பிற்காலத்தில் சுவர்க்கத்திற்கு, வழியை காட்டப்போகும் என்று பூரணநம்பிக்கையுடன் இருக்கும்] தனபதி, தன் ஸ்வீகார புத்திரனுடன் கொஞ்சிக் கொண்டிருந்தான்.

கணவனின் கபடமற்ற முகத்தையும், குழந்தையின் மழலைச் சொல்லையும், மனமாரக்கண்டு காதலித்துக் கொண்டிருந்தாள் கள்ளம் கபடமற்ற காரிகை சுசீலை.

இவர்கள் அன்று இருந்த நிலையைப் பார்க்கப் பார்க்க, தனபதியின் தங்கைக்குப் பொறாமை கொழுந்து விட்டு எரிய

ஆரம்பித்தது. மீறி விட்டாள்! அவளின் துவேஷம கோபத்தின் எல்லையையே தொட்டு விட்டது. 'அண்ணு!' என்ருள்சற்று ஆத்திரத்துடன்.

'வா! அம்மா! என்ன வருமபோதே இவ்வளவு ஆத்திரத்துடன் பேசசு வெளிக் கிளம்புகிறதே.'

'அணணு! வா! வா! தங்கள் போக்கு ஒரு மாதிரியாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது.'

'என்ன அம்மா! இத்துணைநாள் என்னிடம் கண்டு பிடிக்க முடியாத புதுப் போக்கை இன்று நீ கண்டு பிடித்துவிட்டாய்?'

'என்னவா! அவசியம் தெரிநதுதான் கொள்ளவேண்டுமோ? கவனி! நான் கேட்பதற்குத்தகுந்த பதில் உன்ஞல் சொல்ல முடியுமா'.

'ஏன் அம்மா! அவ்வளவு பதட்டம்! பொறுமையுடன்கேள் தெரிநதால் சொலலுகிறேன்.'

'உன் பெருமையைப் பிற்காலத்தில் பரவசெய்பவன் யார்? உனது பிள்ளையும, எனது கண்மணியும். போகட்டும. உன்மோட சத்திறகுக காரணமாயிருப்பவன்! நம குழநதை. இவவளவு தெரிந்து வைத்துமா! உனக்கு அவவளவு மமதை! உன் சொத்துக்கள்பூராவையும அநுபவிபபதற்கு நமகுழநதை?'

'என்னமமா! என்றும இல்லாமல் இப்படி இன்று தாறு மாருகப பேசுகிருயே.'

'போதும் நிறுத்து. நீயா! என் அண்ணன். நயவஞ்சகம் படைத்த மனிதன் அல்லவா! உன்வாழ்விற்கும, தாழ்விற்கும், பொருளுக்கும, மோட்சத்திற்கும, காரணமாய் உள்ளவன் என் மகன். சிந்தித்துப்பார! இனி உனக்குப் பிள்ளை பிறக்குமா? போன ஜன்மத்தில் எவ்வளவு பாபம் பண்ணினுயோ? அந்த பலன்தான், இந்த ஜென்மத்தில் குழந்தயேயில்லாமல் போய்

விட்டது. என்னைப்பார்! நான் எவ்வளவு அன்புடன் உன்னிடம அன்பு செலுத்தியிருந்தால் என் ஒரேமகனை உன்னிடம் ஒப்படைத்திருப்பேன். யோசி! நன்றாக யோசித்து ஒரு முடிவிற்கு வா! நீ என்னைச சற்றாவது சிந்தித்துப் பார்த்ததுணடா? உன் மனைவியின் பெருமையும உன வளாப்புப் பிள்ளையின் புகழ்ச்சியுந தான் உனக்குப் பெரிதாகிவிட்டது. போ! எப்படியாவது தொலை' [என்று சரமாரியாகப் பொழிந்தாள், பேதைப் பெண.]

அங்கம் 2.

'தங்காய் போதும நிறுத்து: உண்மைதான்! நான் ஓர் வஞ்சகம படைத்த மனிதன்தான். நீ என் தங்கை அல்ல! என்னை வாழ வைத்த தெய்வம்! நான அறிவற்றவன்தான், ஞாயம!' அஞ்ஞான சேற்றில் அழுந்தித் ததத்தளித்துக கொண்டிருந்த என்னை உன் அன்பான சொல்லினால் அசசேறறைச சுத்தம் உண்டாகுமபடி செய்து விட்டாய. நீ சொல்லிய வார்த்தைகள், உன் பெருமையினால் வெளிபட்டதாக நினைக்கலாம: அது தவறு. அவ்வார்த்தைகள் முழுவதும தெய்வீக சகதி பொருந்தியது. இந்தச சொத்தும, உடைமையும, மின்னலைப்போன்றது. காலையில் தாமரை அழகாகப் பூத்துககுலுங்கும; மாலையில் வாடி விடும அதுபோலத்தான். எடுத்துககொள் இநதச சாசுவதமற்ற, பொன்னையும பொருளையும், ஏன இநத மகனையும நீயே எடுத்துக் கொள். பொருளின் பேரில், ஆசையை அதிகம செலுத்திய பெண்ணே! யாவறறையும எடுததுககொள்! இந்த ஜன்மத்தில் நான் குழந்தை அற்றவனாய்ப் போய் விட்டேன் அல்லவா? போகட்டும! அடுதத பிறப்பிலாவது நான் ஒரு குழநதைக்குத் தநதையாக வரும பாக்கியத்தை அடைகிறேன. வருகிறேன்! அம்மா! இனி எனக்கு இங்கு இடமில்லை.

சுசீலை புறப்படு! சாசுவதமற்ற வீட்டை விட்டு, உண்மையான ஞான வீட்டை அடையலாம' [என்றான் தனபதி.]

'அண்ணா' என்றாள் அறிவற்ற பெண்!

'தங்காய்! என்னை நீ வாழவைத்தவள்; நீ சுகமாய் குழந்தையைப பார்த்துக்கொள். வருகிறேன்'

[பாவம தனபதி போய் விட்டான்.]

அங்கம் 3.

'என்ன சோமநாதரே! தனபதி தன் தமக்கையினிடம் சண்டை போட்டுக் கொண்டு வெளியில் போய் விட்டாராமே?'

'ஏய்! ஏனையா! பொய் கூறுகின்றீர். சண்டையா போட்டுக் கொண்டு போனார் அவா. அறிவு நிரம்பிய மனிதா. இல்லறம பிடிக்கவில்லை. கானகத்தில் சென்று சிவனின் அன்பைப் பெற தவம் சென்றார்.'

'ஏன்! அதை வீட்டிலேயே வைத்துக் கொண்டு சிவனைத் தொழுதால் இவருக்கு ஆணடவன் அருள் செய்யமாட்டாரோ!'

'அட! அதற்கு இபபொழுது என்ன வநதுட்டுது! அவன் போனான். போனவன் போகடடுமே! அவன் சொத்துககள் பூராவையும், அந்தச்சினன பையனும, அநத விதவையுமா அடைவது!'

'ஆமாம! அதை விட்டு விடடு, எதை எதையோ இவவளவு நேரம வமபளந்து கொணடிருநதோமே?'

[பங்காளிகள் திட்டமிடடு விட்டார்கள தனபதியின் சொத்தைக் கவர முடிவு]

[பேதைப் பெண்ணை ஞாயத்திற்கு அழைத்தார்கள் ஞாதிகள். பாவம! திக்கற்ற அவள், பணத்தை வைத்துக்கொண்டு வாதாட முடியுமா? சொத்துக்கள் பூராவும ஞாதிகளின் பககம ஒப்படைக்கப படடது.]

(வரும)

மூன்று புருஷரத்னங்கள்

பிர்மஸ்ரீ. ய. மகாலிங்க சாஸ்திரிகள், M. A., B. L.,

உஜ்ஜயினியில், ஹர்ஷன் என்ற மற்றொரு பெயருடைய விக்ரமாதித்ய சகரவர்த்தி ஆண்டுவந்தான். அவன் மிலேச்சர்களை நாட்டைவிட்டு ஒழித்ததால் சகாரி என்று புகழ்பெற்றான். நற்குணங்களுககு இருப்பிடமான அவனுடைய ஐச்வர்யம் குணவான்களை ஆதரிப்பதில் பயன்பட்டது. யோக்யதை உள்ளவர்களைப் பூஜிப்பவனுக அவனுடைய கீர்த்தி எட்டுத் திசைகளிலும பரவியதால் பக்ஷிகள் உயர்ந்த விருக்ஷத்தை அடைவதுபோல வித்துவான்களும் கவிகளும் அவன் சபைக்கு வந்து கூடினர்.

அப்படி விகரமாதித்யனை நாடிவந்த கவிகளில் மாத்ருகுப்தன் என்பவன் ஒருவன். அவன் பல ராஜ சபைகளில் ஆதரவுபெற்றவன். இருநதாலும விகரமாதித்யனுடைய கீர்தகி அவனை உஜ்ஜயினுககு இழுத்தது. அவன் தன் யோகயதைககுத் தகக விசேஷமான ஆதரவை எதிர்பாாதது அஙகுவந்தான். ராஜஸேவையினுல் தன் மதிப்பையும், ஸ்வயேசசையையும் இழக்காமல பெருமைபெற விகரமாதித்தன் சபை ஒன்றே தகுந்த இடம என்று நிச்சயிதது கொண்டான். லோகத்தின புண்யவசத்தால் முன்னிருந்த பெருமைவாய்ந்த பூபதிகளை எலலாம் மறககச்செய்யக்கூடிய உத்தமனுக அவன் அவதரித்தான் என்றும், அவனிடம் தன் யோகயதையைப் பிரகாசப்படுத்தினல் தக்க கௌரவத்தை அடையலாம் என்றும் ஆவல்கொண்டான். இவனை ஸேவித்தால் பிறகு மற்றொரு அரசனை ஸேவிகக வேண்டிய அவசியமேற்படாது என்றும, ஊர்சுற்றாமல் ஸ்வஸ்தமாக ஓரிடத்திலேயே இருந்து காலங்கழிககலாம் என்றும் எண்ணினன்.

இவ்வித மனோரதங்களுடன் மாத்ருகுப்தன் விக்ரமாதித்யன் சபையில் பிரவேசித்து, அங்குள்ள வித்துவான்கள் மத்தியில் கலந்துகொண்டான். ஆனால் தன்னைப்பற்றி ஒன்றும் பிரகடனம் செய்துகொள்ளாமல் அடக்கமாகவே இருந்தான் படாடோபமில்லாமல். புதிதாய் தன் சபைக்கு வந்திருக்கும் மாத்ருகுப்தனை விக்ரமாதித்யன் கவனித்து, இவ்வளவு அடக்கமும் கம்பீரமும் உடைய இவன் யோக்யதை எத்தகையதோ என அறியவேணும் என்று ஆவலுடையவனாயிருந்தாலும், உசிதமான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துச் சும்மாயிருந்தான். சாமான்யமாக ஸம்மானம் பெறுகிறவர்களுடன் தன்னைச் சேர்க்காததிலிருந்தே மாத்ருகுப்தனும் தனக்கு விசேஷ ஸம்மானங்கள் செய்ய அரசன் ஸங்கல்பித்திருப்பதாகத் தீர்மானித்துக்கொண்டு மனதில் திருப்தியுடன், இடைவிடாது அரசனின் ஸமீபத்திலிருந்து ஆஸ்தான வித்துவான்களுக்கு உரியபடி ஸேவை புரிந்துவந்தான்.

ஆத்மச்லாகையில்லாமல் பிறர்குணங்களைப்புகழ்ந்து வினயத்துடன் நடந்துவரும் மாத்ருகுப்தனிடம் மற்ற பண்டிதர்களும் நட்புக்கொண்டார்கள். அவனுடைய இங்கித ஞானம், அடக்கம், மரியாதை, உசிதமான நடவடிக்கை, நல்லொழுக்கம், பெருந்தன்மை இவைகளை நாளுக்குநாள் உணர்ந்து அரசன் பெருமிதமடைந்தான். இவ்விதம் மாத்ருகுப்தனுக்கும், விக்ரமாதித்யனுக்கும் பரஸ்பரம் பிரீதியும் மதிப்பும் விருத்தியாகிவந்தும் மாத்ருகுப்தன் எதையும் அரசனிடம் பிரார்த்திக்கவில்லை. அரசனும் அவனுக்கு எதைக்கொடுப்பது, எப்படிக்கொடுப்பது என்று ஆலோசித்தவண்ணமே இருந்தான்.

ஒருவருஷம் கழிந்தும் மாத்ருகுப்தன் அரசவிச்வாஸத்திலும், சபையில் ஊக்கத்துடன் சேவைபுரிவதிலும்

சிறிதும் தளரவில்லை. அரசன், மாத்ருகுப்தன் தன் சபைக்கு இன்றியமையாதவன என்று கருதியும், அவனிடம் நாளுக்குநாள் மதிப்பும் அன்பும அதிகரித்து வந்தும் அவனுக்கு ஒன்றும் விசேஷமாய் செய்துவிட வில்லை. மாதருகுப்தன் அந்தரங்க அபிப்ராயங்களை அவனுடன் தனியே உரையாடி, அறிந்துகொளள வேண்டுமெனறு அரசன சந்தர்ப்பத்தை எதிர்பார்த் திருநதான். மேலும் பெருங்கொடையாக எதை அவ னுககுக கொடுககலாமெனறு யோசித்துககொண்டிருந் தான். மாத்ருகுப்தனுககுத் தைவானுகூலமுள்ள காலமும் வரவில்லைபோலும்!

ஒருநாள் வெளியில் பவனிவந்த விகரமாதித்தன் மாத்ருகுப்தனைப் பார்த்தான். அவன் பரிதாபநிலை அரசனின மனதைக கலககியது. உடம்பு சிலிர்த்து, மேனியெல்லாம மஙகி, அழுககடைந்த கிழிசல் வஸ்திர முடுதது அவன் நின்ற தோற்றத்தைக கண்ணுற்ற விகரமாதிததன் குறறம் தன்னுடையதே என்று சிந்திக கலானன். "நான இந்த உத்தமபுருஷனை வெகுகாலம் பரீக்ஷித்துவிட்டேன. வெளியூரிலிருந்து வந்து என்னைச் சேவிப்பவனை, எங்கே இருப்பிடம; எப்படி சாப்பாடு; யார் உதவி என்றெல்லாம விசாரித்துச் சௌகரியங்கள் செய்துகொடுககாமல், ஐச்வர்யமதத்தினல் உதாசீனமாய் இருநதுவிட்டேனே! இவன் என்னல் உபேக்ஷிககப்பட்ட நிலைமையில், என்ன என்ன கஷ்டங்களை அனுபவிக கிருனே! அவனுககுத் தேர்தல்சொலபவர்கள யாரோ! ஐவேஜி இல்லாத அயலூர்ககாரனை யார் கவனிககப் போகிறார்கள். வியாதிவந்தாலும் வைதயம் செய்து கொளள அவனுக்கு வசதியிருக்கிறதா? தன்பந்துககளை யும, தேசத்தையும விட்டு வந்து என்னை ஆச்ரயித்த ஒரு குணவானை நான ஆதரிக்காமல் இருந்துவிட்டேன்" என்றவாறெல்லாம் யோசித்து அரசன் தன்னையே

நொந்துகொண்டான். "இவனுக்குச் சிந்தாமணியைக் கொடுத்தாலும் போதாது; கல்பகவிருக்ஷத்தைக் கொடுத்தாலும் போதாது; இவனுககுத் தகக சம்மானத்தை எவ்விதம் நான் செய்து மனம நிம்மதியடையப்போகி றேன்" என்று அரசன் கவலையுற்முன்.

இதன் மத்தியில் பனிககாலம் வந்தது.

ஓரிரவு நடுநிசியில் அரசன் விழித்துககொண்டான் அவன் அறையில்தீபங்கள் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. கணப்புச்சட்டியில் தணல்கள் தகதகவென்று பிரகா சித்துக கொண்டிருந்தன. ஜன்னல்கள் மூடப்பட்டிருந் தன. ஆனல எங்கேயோ இரண்டொரு இடைவெளிகள் வழியே உளளே வீசிய காற்று விர் என்று சப்தித்துக் கொண்டு, உடல பதறசசெய்யும சீதத்தை உண்டுபண் ணியது. தீபங்கள் அலேய ஆரமபிததன. அவைகளை எண்ணெய் ஊற்றி நொந்திவிடவும, திறந்திருந்த இடை வெளிகளை மூடவும் ஒரு ஸேவகனைக் கூப்பிட நினைத்த அரசன் "யார் காவல்காரன் வெளியேயிருப்பவன்" என்று கேட்டான். சிறிதுநேரம் பதில் ஒன்றும் வர வில்லை. காவல்காரர்கள் குளிருக்குப்பயந்து மூலைமுடுக்கு களில் பதுங்கி அயர்ந்த நித்திரையில கிடந்தார்கள். அரசன் மறுபடி கூப்பிடுவதா இல்லையா என்று யோசித் துக கொண்டிருககுமபோது, கொஞ்சதூரத்திற்கு அப்பாலிருந்து ஒருபதில வந்தது. "அரசே! நான இருக்கிறேன்" என்று. "வா உள்ளே" என்முன் அரசன். உள்ளே பிரவேசித்தான் மாத்ருகுப்தன்.

அரசனின் ஆச்சரியத்தைவிட மாத்ருகுப்தனின் ஆச்சர்யம் அதிகமாயிருந்தது. அரசன் படுக்கை அறை யில் யாரும் பிரவேசித்தது கிடையாது. அதன் சோபை மாத்ருகுப்தன் கண்ணைக்கவர்நதது அங்கு தென்பட்ட லக்ஷ்மீ விலாஸத்தைக்கண்டு அவன் திகைத்துப்

போனான். அரசனும் சேவகர்களுக்குப் பதிலாய் மாத்ருகுப்தன் பிரவேசித்ததைக்கண்டு வியப்படைந்தான் ஆனாலும் அவனுடன் தனித்துப்பேச ஒருசந்தர்ப்பத்தை வரவேற்று, திருப்தியுடன் "கவிச்ரேஷ்டரே உட்காரும்". என்றான் அரசன். மாத்ருகுப்தன் என்ன விஷயமோ என்று சற்று ஐயமுற்றுக் குளிர் வேகத்தினால் வட வடத்த-மேலும் அதிகமாக நடுங்கும நிலைமையில் பயத்துடனும் வினயத்துடனும் சற்றுவிலகி உட்கார்ந்தான். 'இப்பொழுது என்னநாழியாகிறது" என்று வினவினான் அரசன். "இன்னும் இரவில் ஒன்றரையாமம் பாக்கி" என்றான் கவிசரேஷ்டன். இவ்வளவு கணக்காக உமக்கு எப்படித்தெரியும்? என்று வினவினான் அரசன் சற்றுப் புன்சிரிப்புடன். மாத்ருகுப்தன் அரசன் பிரசன்னமாயிருப்பது கண்டு இதுதான் தன்நிலைமையைத் தெரிவித்துக் கொள்ளத் தக்கதருணம் என்று எண்ணி, ஒரு சுலோகத்தினால் விடையளித்தான். "குளிரினால் உளுத்த தோலிபோல் மயிர்ச்சிலிர்க்க, வாழவதெப்படி என்ற கவலைககடல் விழுங்க, அலர்ந்து போகும் கணப்புச்சட்டியின் நெருப்பைப்பசிமெலிவினால் வலிவற்ற வாய்க்காற்றினால் ஊதி ஊதி உதடு வெடிக்கத் தூக்கமில்லாமல் உட்கார்ந்துகொண்டிருக்கும் எனக்கு இராககாலம் பாத்திரம் அறிந்து அளிக்கப்பட்டபூஸ்திதியைப்போல அக்ஷயமாக வளர்ந்து வருகிறது" என்று.

இதைககேட்ட அரசன் கவியின் இங்கிதத்தை அறிந்து மனததிற்குள் வெட்கிப்போனான். 'கவிசசிரேஷ்டரே இதை யறியத்தான் உமமை அழைத்தேன்' என்று கூறிக் கவியை வெளியே அனுப்பிவிட்டு அவன் சிந்திககலானான்.

"மனம் நொந்த குணவான்களின் துயரம் ததும்பும் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு உபகாரமில்லாத வாழ்க்கை நடத்தும் கனதன வான்களின் ஜன்மம

குப்பைக்குக்கூட லாயக்கில்லை. நிஷ்பிரயோஜனமான அபிநந்தன வார்த்தைகளை அளந்துவிட்டு உபகார சூன்யர்களாயிருக்கும கிருபணப்பிரபுக்களில் நானும் ஒருவன் என்று இக் கவிச்ரேஷ்டன் என்னை உள்ளத்தில் வெறுத்துக்கொண்டு தன்கஷ்டங்களுக்கு விமோசனமில்லை என்று நிராசையாகி துக்கத்தில் ஆழ்ந்துகிடக்கிறான் என்றல்லவா தெரிகிறது. இந்தப்பாதகத்தை நிவர்த்திசெய்துகொள்ள நான் இவனுக்கு எததகைய ஸமமானத்தைச் செய்யலாம்? இவன் என்னைககுறித்து இயற்றிய கவிதையில் தனக்கு ஸ்வல்பபூஸ்திதி வேண்டுமென்பதைச் சூசிப்பித்திருக்கிறான். இவனுக்கு ஒரு ராஜ்யத்தையே நான் கொடுத்துவிட்டால் என்மனதிற்கு நிம்மதி ஏற்படும். இப்போது என் சாமராஜ்ய செலவாகத்திற்கு உட்பட்ட காஷ்மீர ராஜ்யத்திற்குப் பரமபரை வார்சு இலலாததால் ஸிம்மாஸனம் சூன்யமாயிருப்பதாயும தகக அரசனை அமர்த்தித்தரவேண்டும என்றும அத்தேசத்துப் பிரஜைகள் என்னிடம் விண்ணப்பித்துக கொணடிருக்கிறார்களா. அந்த ராஜ்யத்திற்கு ஆசைப்பட்டு அநேகம ஸிம்மாஸனாதிபதிகள என்னிடம் விண்ணப்பம் செய்துகொண்டு உத்திரவுக்குக் காத்துக கொண்டிருக்கிறார்கள். அந்தக காச்மீர ராஜ்பததை மாத்ருகுப்தனுககு நான் கொடுத்து விடுகிறேன். அதுவே அவனுடைய குணங்களுக்கேற்ற ஸம்மானம்'

இவ்விதம் தீர்மானம்செய்த அரசன் காவல்காரனைக கூப்பிட்டு, தீபங்களை நொந்திவிடச்செய்தான். காச்மீர ஜனங்களுககு ஒருபததிரிகை வரைந்து அனறு இரவே தன் தூதர்களை அப்பத்திரிகையுடன காச்மீரததிற்கு அனுப்பினான். பின்பு படுததுககொண்டான்.

(வரும)

கடவுள் வணக்கம்

[புலவர், திரு. ந. இராமநாதன், கரந்தை.]

[இப்பாடல், ஜான் டிரிங்க்வாட்டர் (John Drink Water) என்பவர் பாடிய கடவுள் வணக்கப் பாடலைத் தழுவி இயற்றப் பட்டது,]

இருளிடை ஞானம் வேண்டி இறைஞ்சினே மல்லே மன்றி, மருள்தர விழிமுன் தொங்கும் மாயையாம் படாஅம் விலக்கப், பொருள்களை உள்ள வாறே புல னிடைக்காட்டும் காட்சி, அருளறும் மடிகள் தம்மை ஆண்டவ அடைந்தி லோமே. 1

இடையறா வாழ்வி னீற்றில் இலங்கிடு ஞானம் தன்னைத், தடையிலா தருள நுமயின் தண்கழல் தாழ கில்லோம், அடைவுறச் செயலக ளாற்றி ஆக்கத்தை யாக்கும ஞானம, அடைந்திடப் பெரும, வுமயின் அடியிணை தாழ்ந்தி லோமே. 2

தக்கன இவைக ளன்றித் தகாதன இவைக ளென்னும, மிக்கநல் லறிவை ஈயமெனகழல் பணிந்தி லோமே, ஒக்கநல் வீட்டிற சோக்கும உயர்பெரும வெற்றி நாளை, நோக்கினீர் விரைவா யாக்க நும்கழல தொழுதி லோமே.

காலமும் விதியும் ஆக்கும் கடும்பெருந் துன்பந் தன்னை, ஏலவே நீக்க வென்றே எம்மகத் தெண்ணி லோமே, வாலறி வுடையாய்! நுமமால வைத்தன தடைக ளென்னில், சாலவே யறிந்தே நீக்கத் தகுதியும் வைத்தா யன்றே. 4

ஆதலின் வேண்டி லோமே அவைகளைப் போக்க வன்றித், தீதகல்உயிராம் மண்ணில் திகழ்வினை வித்தும் யாங்கள், போதவே விளையுங் காலம் புந்தியி லறிவோ

மை இய, ஆதலால் அதற்கும் யாங்கள் அடியினை பணிந்திலோமே. 5

இறைவனே! எங்கள் வாழ்வின் எழிலுறும் முடிவாம் தீர்ப்பு, முறையாலெம மார்பில நீவிர் முன்னியே வரைந்த தாலே, கறையிலா வழியிற் செல்லும் கருத்தினை யறிவோ மாயின், குறை சில வுடையேம் நும்பாற் கூறு தும் கேணமி னை இய. 6

எண்ணிய எண்ணியாங்கே இயற்றிடக குலையா தோங்கும், திண்ணிய எண்ணம் ஈயத் திருவடி பராவு வோமே! உண்மையாய் அறிந்த வாறே ஒளிர்பெருஞ் செயல்க ளாற்றக, கண்ணிய வன்மை ஈயக கழலடி யிறைஞ்சு வோமே. 7

இவர் பாடலால் நாம சில நல்ல வுண்மைகளைக காணுகின் றோம. பெருமபான்மையான மக்கள இறைவனை நன்கு பயன் அடைய வணங்குகின்றார்கள். இவற்றுள் முதற்கண் கூறத் தகுந்தது அறிவு ஆகும. அதுவும மற்றவருக்கில்லாத தெய்வத் தன்மையுடைய அறிவை நல்க இறைவனைவேணடுவர். ஆனால் இவரோ அதுவேண்டாமென்று கூறுகின்றார். அறிவுவேண்டா மென்பது அவா எணணமலல. என்று உடலொடு தோன்றி னோமோ அன்றே அறிவும இறைவனால் கொடுக்கப்பட்டிருக் கின்றது. ஆகவே அது குறித்து வேண்டுவது வீணென்பது அவர்கருத்து.

இரண்டாவதாக மக்கள் இறைவனிடம வேண்டுவது அந்தமி லின்பத்து அழியாவீடேயாகும. இவரோ இதனையும வேண்டி வணங்கவில்லை. வீடென்பது சிந்தையும மொழியும செல்லா நிலைமைத்து என்பதும, அது இறைவனால்தான் அருளத்தக்கது என்பதும் இவர் அறியாததல்ல "அடுத்து முயன்றாலும ஆகு நாளன்றி எடுத்த கருமங்களாகா" என்னும் மனத்திட்பமுடைய வர், நமதுடைய உடலையும உயிரையும நோக்கினால் ஒரு உண்மை

பெறப்படும். உயிரோ அழிவில்லாதது உடலொடு கூடியிருப்பது போலத் தோன்றினும கூடாதிருப்பது. ஆனால் உடலோ அழியக் கூடியது. உயிரின்வேறானது. மூவகைத்துன்பங்களையும அய்த்துழ லும் இயல்பினையுடையது. இங்ஙனம வேறுபாடுகள இருப்பினும, உடலும, உயிரும ஒனறியிருக்கின்றது, ஏதோ ஓர் இன்றியமை யாத பெருங்காரியத்தைச சாதிக்கத்தான் இக் கூட்டமல்லாக் கூட்டம ஏறபட்டுள்ளது. அந்த ஒன்று என்ன? அதுதான் வீடடைவது ஆகும. இங்ஙனம் வீடு அடையும காலத்தைக் கடவுளே கணித்துளளார. ஆதலின் அது குறிதது விரைய வேண்டுமென்று வேண்டுவதில் பயனில்லை

அடுத்துமக்கள் தாங்களடையும துன்பததினின்றும் தங்களை காக்கவேண்டுவர். இவரோ அது குறித்தும வேண்டவில்லை. ஏனெனில் துன்பங்களும இறைவனால் மக்களின் நன்மைக்காகப் படைக்கப்பட்டனவேயாகும. துன்பத்தில் உழலுமபோதுதான் மனிதன் அறிவு பெறுகின்றான். சுடச்சுடரும பொன் போல அறிவும துனபத்தால் சுடச்சுட ஒளிவிடும் வாழ்விற்றோன்றும நல்லன கெட்டனயாவும நமக்கு அறிவைக்கறபிக்கின்றன. ஆகவே நல்லனகண்டபோது மகிழ்தலும துன்பங்கணடபோது துடித் தலும சிறந்ததல்ல. இவவுலகததிடை நோய வருகின்றதென்றால் அநநோய்க்கு மருந்தும உலகிலதானுள்ளது. ஆகவே துன்பங் களையாக்கிய இறைவன் அவைகளை விலக்கும அறிவையும கொடுத் துள்ளான். ஆதலின் துன்பத்தினின்று காக்கவும இவா இறைவனை வேணடவில்லை.

அடுத்துத் தாங்கள் செய்யும் காரியங்கட்குத் தக்க வெகுமதி கிடைக்கவேண்டுமென இறைவனை வேண்டுவர். இவர் அதனைக் குறித்தும வேண்டவில்லை. உலகில் நாம் எநதககாரியம் செய் தாலும அதற்கேற்றபயன நமமை யடையாமற்போகாது. நெல் விதைப்பவன் அதறகேற்ற செயல்களைச செயவானேல், விளைவு தானே ஏறபட்டுவிடும. நெல் விதைத்தவன் இடையிலேயே பயனைக் காண இறைவனை வேண்டினும் பயன் கிட்டாது. விளையுங்காலததில்தான் விளையும. ஆகவே நற்செயலாற்றும

ஒருவன் பயனை எதிர்நோக்கி ஆற்றக்கூடாது. அதனை இயற்கையின் கையிலோ, அல்லது இறைவன் கையிலோ விட்டுவிடவேண்டும். ஆதலின் இவர் இவைகளைப்பற்றி எல்லாம் வணங்கவில்லை.

இவைகளை விரும்பி இறைவனை வேண்டாத இவர் இறுதியாக இரண்டினை அடைய வேண்டுகின்றார். அந்த இரண்டும் மக்களினத்தின் மேம்பட்ட யாவரிடையிலுங்கூடக் காணப்படும் குறைகளாகும். அக்குறைகளைப் போகக நூலறிவால் முடியவில்லை. அக்குறைகளைப் போக்க முடியாமல் ஞானிகளென்று கருதப்பட்டவர்களும் தொல்லையடைந்துள்ளார். அவையாவன. ஒன்று உணர்ந்தவாறே உருவாக்கும் ஒள்ளிய எண்ணம். மற்றொன்று, அறிந்தவாறே செயலாற்றும் அசையா வன்மையாகும். இந்த இரண்டையும் தருமாறு இறைவனை வேண்டுகின்றார். தாமுணர்ந்தவாறும் அறிந்தவாறும் வாழ்வினை அமைத்துக்கொண்டவா உலகத்தில் எத்தனை மக்கள் உள்ளனர். ஓரிருவர் இருக்கின்றார்களோ என எண்ணக்கூட முடியவில்லை. அறிந்தது ஒன்று. செய்வது பிறிதொன்று. இங்ஙனமே உலகம் காட்சியளிக்கின்றது. உலகிற்காணும் குறைகள்யாவும் இவ்விரண்டன அடிப்படையில் எழுந்துள்ளன. ஆகவேதான், மனிதனுடைய அறிவாலும் திறமையாலும் ஆறறமுடியாத இவ்விரணடையும் அருள இறைவனை வேண்டுகின்றார்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் அருளுபதேசம்

ஒளியையும் இருளையுந்தரும் பகலும இரவும் தததஙகால எலலையின் மாறிமாறி வருதலல்லது உலகினா விருப்பததின்வழி வருதலும் போதலும் இல்லாமைபோல, ஆககக கேடுகளைத்தரும் நலவினை தீவினைகளும தததங் கால எல்லையில மாறிமாறி வருதலலலது அவற்றை எய்துவோரது விருப் பததினவழி வருதலும் போதலும் இல்லை (சிவபோகசாரம்)

திருக்குறள் வெளியீட்டைப் பற்றி:

வான்புகழ் வள்ளுவன்

திருக்குறள் அறத்துப்பால் - உரைவளம்

[கல்கி 17—12—50]

உலகம் கண்டறியா உத்தம புருஷராகிய காந்திமகாத்மா நம்மிடையே வாழ்ந்திருந்து, நமக்காக உயிர் துறந்து, இன்னும் மூன்று ஆண்டு முழுமையாக முடியவில்லை. அத்தகைய மகான் உயிர் ஊட்டி வளர்த்த ஸ்தாபனம் காங்கிரஸ் மகாசபை.

அந்த மகாசபையைத் தோற்றுவித்தவர்கள் தேச பக்தியிலும் அறிவாற்றலிலும் சிறந்த மகான்கள். தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, கோபாலகிருஷ்ண கோகலே, லாலா லஜபதி ராய், பாலகங்காதர திலகர், தேசபந்து தாஸ், மோதிலால்நேரு, அப்பப்பா! இந்தத் திருநாமங்களைச் சொல்லும்போதே நமக்கு மெய்சிலிர்க்கிறது.

நம்முடைய காலத்தில் காங்கிரஸ் மகாசபையின் பெயரால் பதினாயிரம், லட்சம் என்று கணக்கில்லா தேசபக்த வீரர்களும், நாரீமணிகளும் சர்வ பரித்தியாகம் செய்தார்கள்; சிறை புகுந்தார்கள்; சொல்லொணாக் கஷ்ட நஷ்டங்களை அநுபவித்தார்கள். இப்படித் தபோதனர்களும், தியாகிகளும் கண்ணீர் விட்டுவளர்த்தகாங்கிரஸ் ஸ்தாபனத்தின் நிலை இப்போது என்ன ஆகி யிருக்கிறது என்று பாருங்கள்!

எத்தனை லஞ்சப் புகார்கள்! எவ்வளவு வல்லடிவழக்குகள்! இரும்பு பெர்மிட்டுகள்! ஸிமெண்ட் லைசென்சுகள்! அதிகார துஷ் பிரயோகங்கள்! தஸ்தாவேஜுகள் காணாமற்போகும் மாயஜாலங்கள்!—இத்தகைய புகார்களைப் பிரபல காங்கிரஸ் வாதிகளே ஒருவர்மேல் ஒருவர் சொல்லிக் கொள்கிறார்கள். நமக்குக்கேட்டால் காது கொப்பளிக்கிறது! உள்ளம் நொந்து புண்ணாகிறது! இவ்வளவும் காந்திமகான் நம்மைப் பிரிந்து மூன்று ஆண்டுகளுள்! பாரதநாடு சுதந்திரம்பெற்று மூன்று ஆண்டுக்குள்!

இதை நினைத்துப் பார்த்துவிட்டு, நம்முடைய தேவாலயங்களைப் பரிபாலிப்பதற்கு நம்முடைய தமிழ்நாட்டு முன்னோர்கள் செய்துவைத்து விட்டுப்போன ஏற்பாடுகளையும் சிந்தித்துப் பாருங்கள்! நம் முன்னோர்கள் எத்தனை அறிவாளிகள், எவ்வளவு முன்யோசனைக்காரர்கள், எவ்வளவு தபோபலம் உடையவர்கள், தர்மபரிபாலனத்தில் எவ்வளவு பற்றுடையவர்கள் என்பதெல்லாம் நன்றாக விளங்கும்.

நம் முன்னோர்கள் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான ஆலயங்களை நிர்மாணித்தார்கள். அந்த ஆலயங்களின் பரிபாலனத்துக்கு நிலங்களையும் வேறு சொத்துக்களையும் 'நிவந்தங்'களாக விட்டார்கள். அத்துடன் நின்று விடவில்லை. ஆயிரம் ஆண்டு நிலைத்துநிற்கக்கூடிய ஆலயங்களைக் கட்டியவர்கள், அவை அவ்வளவு காலம் நன்றாகப் பரிபாலிக்கப் படுவதற்குரிய ஏற்பாடுகளையும் வகுத்தார்கள்.

இதற்காக மடாலயங்களை ஸ்தாபித்தார்கள்; மடாலயங்களுக்குச் சந்நியாசிகளைத் தலைவர்களாக்கினார்கள் தேவாலயங்களின் சொத்துக்களை நிர்வகித்து ஆலயவழிபாட்டை முறைப்படி நடத்திவைக்கும் பொறுப்பை அந்த மடாலயத் தலைவர்களிடம் ஒப்புவித்தார்கள்.

தீர்க்க திருஷ்டியுடன் செய்த இந்த அற்புத ஏற்பாட்டின் காரணமாகவே இந்நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான ஆலயங்களும் அவற்றின் சொத்துக்களும் இன்றுவரையில் உருவாக நீடித்து நின்று வருகின்றன.

துறவிகளைத் தலைவர்களாகக்கொண்ட மடங்களிடம் ஒப்புவியாமல் இல்லறத்தார்களிடம் ஒப்புவித்த கோயில்களும் கோயில் சொத்துக்களும் என்ன கதி ஆயின என்பதற்கும் சில அத்தாட்சிகள் இருக்கின்றன. சில பழமையான ஆலயங்களுக்கு 'நிவந்தம்' விடப்பட்டதாகச் சாஸனங்களில் கண்டுள்ள நிலங்கள் இப்போது தனிப்பட்ட மனிதர்களின் சொந்தப் பட்டா நிலங்களாக இருந்து வருகின்றன.

முதலில் கோயில் தர்மகர்த்தாக்கள் ஏற்படுகிறார்கள். அவர்களுடைய புதல்வர்கள் அல்லது குடும்பத்தார் அதே தர்மகர்த்தா ஸ்தானத்திற்கு வருகிறார்கள். பிறகு இது பரம்பரை பாத்தியதை ஆகிவிடுகிறது. சில தலைமுறைகளுக்குப் பிறகு சொந்தப்பட்டா நிலங்களாகவே ஆகிவிடுகின்றன. கோயில்கள் இருந்த இடத்தில் கற்குவியல்கள்தான் மிஞ்சுகின்றன!

இந்தமாதிரி அநுபவங்களைக் கொண்டும், இவ்விதம் நடக்கக்கூடும் என்பதை முன்யோசனையினால் ஊகித்து உணர்ந்தும் நம்முன்னோர்கள் தேவாலயங்கள் அதிகமாக உள்ள இடங்களில் சிலமடாலயங்களை ஏற்படுத்தினார்கள். அம்மடாலயங்களுக்குத் துறவிகளைத் தலைவராக்கினார்கள் ஆலய சொத்துக்களையும் ஆலய பரிபாலனத்தையும் அந்தத் துறவிகளிடம் ஒப்புவித்தார்கள்.

நாளடைவில் மடாதிபதிகளாக வருவோரில் சிலர் அவ்வளவு திருப்திகரமான நடவடிக்கை இல்லாதவர்களாயிருக்கலாம். ஓரளவு அவர்கள் வருமானங்களைத் துர்விநியோகமும் செய்யலாம். ஆனாலும்

ஆலயச் சொத்துகளுக்கு அழிவு கிடையாது கோயில் நிலங்கள் சொந்தப் பட்டா ஆகிவிடமுடியாது. ஒருதூ வி இன்னொரு தூ வியிடாதான ஆலய நிர்வாகத்தையும் ஆலய சொத்துக்களையும் ஒப்புவித்து ஆகவேண்டும்.

இத்தகைய அருமையான நிர்வாகமுறையை நமமுன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். இதன்காரணமாகவே ஆலயச் சொத்துகள் பெரும் பாலும் அழிவின்றி இருந்துவருகின்றன அதனாலேயே நம் புதிய ஜனநாயக அரசாங்கத்தினர் ஆலய மடாலய சொத்துக்களைப்பற்றி இன்று சட்டம் செய்யவும் முடிகிறது.

நமமுன்னோர்கள் மடங்களையும மடாதிபதிகளையும் ஏற்படுத்தி யிராவிட்டால் ஆலயச்சொத்து எதுவுமே மிஞ்சி யிருந்திராது அதைப் பற்றிச் சட்டம் செய்யவும இப்போது அவசியம் நேர்ந்திராது!

* * * *

மடங்களையும் மடாதிபதிகளையும்பற்றி எவ்வளவோ புகார் சொல்லப் பட்டிருக்கின்றன. மடாலய நிர்வாக ஊழலைப்பற்றிக் கண்டதுண்டமாகவும் சண்டப் பிரசண்டமாகவும் பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. அத்தகைய பிரசாரத்தின் பயனாக எல்லா ஊழல்களையும் போக்கி ஆலய மடாலய நிர்வாகத்தை ஒழுங்கு செய்வதற்காகச் சென்னைச் சட்டசபையில் மசோதா கொணடுவரப்பட்டுச் சட்டமாகப்போகிறது! சட்டமவந்து சிலவருஷங்களுக்குப் பிறகு ஆலயங்களின் நிர்வாகம் என்னநிலையை அடையப்போகிறதோ பார்க்கப்போகிறோம.

காங்கிரஸ் அதிகாரிகள் மூன்று வருஷத்துக்குள் காங்கிரசுக்கு எவ்வளவு நல்ல பெயரிட்டுத் தந்திருக்கிறார்கள் என்பதைப் பார்கிறோம அல்லவா?

சாக்கார அதிகாரிகள் கண்ட்ரோல - ரேஷன் விதிகளை எவ்வளவு நன்றாக அமுல்நடத்திப் பொது மக்களிடம் எவ்வளவு நல்லபெயர் வாங்கி யிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம அல்லவா? ஆலயங்களை யும மடங்களையும நிர்வகிப்பதிலும் சாக்கார அதிகாரிகள் அவ்வளவு நல்ல பெயர் எடுத்து விடலாம!

இப்போதே ஆலயங்களின் எக்ஸிகியூடிவ் ஆபீசர் சிலர், "சாமியாவது பூதமாவது! சுத்தக்குருட்டு நம்பிக்கை!" என்று பிரசாரம்செய்கிற விஷயம் காதில விழுகிறது.

கோயில் சொத்துக்களைக் கொண்டு பள்ளிக்கூடங்கள் வைக்கிறார்கள் அந்தப் பள்ளிக்கூடமாணவர்கள் அந்தக்கோயில் சுவாமியின் படத்தைக் கொளுத்துகிறார்கள்! — இப்படிப்பட்ட செய்திகளைப் படிக்கிறோம் — போகப்போக என்ன ஆகும் என்று யார்கண்டது!

மடாலயங்கள் எவ்வளவு நல்லதொண்டு புரிந்து வருகின்றன என்பதற்கு ஓர் அருமையான அத்தாட்சி இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது. "திருக்குறள் — உரைவளம்" என்னும் நூல் கண்ணைக் கவரும் தோற்றத்துடன் தமிழன்பர்களுக்கு அரும் பெரும் விருந்தாக வெளிவந்திருக்கிறது. வெளியிட்டவர் தருமபுரம் மடாலய ஆதீனத்தார்.

மேலட்டையில் திருவள்ளுவர் தவவடிவம் திகழ்கிறது. வள்ளுவர் பாரதத்தாயின் அருந்தவப்புதல்வர் என்பதைக் குறிப்பிட இந்தியாவின் படம் பின்னணியில் திகழ்கிறது. திருக்குறள் என்னென்ன தேசத்துப் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதோ, அந்தத் தேசங்களின் படங்கள் இந்தியாவின் படத்தைச்சுற்றிலும் திகழ்கின்றன.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

என்ற பாரதியாரின் வாக்குக் கீழே பொறிக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் இந்த நூலின் அட்டையே சிந்தனைக்கு ஓர் அரிய விருந்தாக அமைந்திருக்கிறது.

உள்ளே பிரித்துப் பார்த்தால், 536 பக்கங்களில் அறத்துப்பால் மட்டுமே அச்சாகி யிருப்பதைக் காண்கிறோம். பக்கத்தின் அளவு 'கல்கி' தீபாவளிமலரின் அளவாகும். ஆக, இவ்வளவு பக்கங்களும் அறத்துப் பாலுக்குமட்டும் எப்படி உபயோகமாயின்?

வடமொழி நூல்களில் பகவத் கீதைக்கு எத்தனையோ பாஷ்யங்கள் வெளிவந்திருக்கின்றன. அதுபோலவே திருக்குறளுக்குப் பத்துப்பேர் உரையாசிரியர்கள் உண்டு. பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர், தருமர், தாமத்தர், நச்சர் என்போர் உரைகள் எழுதி யிருக்கிறார்கள். திருக்குறளை வள்ளுவர் பெருமான் மிக எளியதமிழ்ச் சொற்களைக் கையாண்டு எழுதியுள்ளாராயினும், அதன் உள்ளுறை அவ்வளவு முக்கியமும் பெருமையும் வாய்ந்ததாதலின் பலரும் உரை எழுதி இருக்கிறார்கள். இதுமட்டுமல்ல; பரிமேலழகரின் உரைக்குக் காரி ரத்னக்கவிராயர் என்பார் நுண்பொருள்விளக்கம் எழுதி யிருக்கிறார்.

முன்னோர் எழுதிய உரைகளில் சில கிடைத்திருக்கின்றன; சில கிடைக்க வில்லை. கிடைத்துள்ள உரைகள், உரைக்கு விளக்க உரைகள் — இவ்வளவையும் இந்த அருமையான நூலில் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகள் ஆயினும் குறளில் நம் அதிர்ஷ்டவசமாக பாடபேதங்கள் அதிகம் இல்லை அவ்விதம் உள்ள சில பாடபேதங்களோடு உரைகளில் காணப்படும் சில பாட பேதங்களையும் இந்நூலில் தொகுத்து அளித்திருக்கிறார்கள்.

இதுமட்டுமல்லாமல், குறளுக்குப் பிற்பாடு தமிழகத்தில் இயற்றப் பட்ட எத்தனையோ நூல்களில் குறளின் வாசகமும் குறளின் கருத்தும் ஆங்காங்கு கையாளப் பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் 'ஒப்புமைப் பகுதி' யில் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக,

> ''தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன் தெரிவார்''

என்பது குறள். இதையொட்டி நாலடியாரில்,

> ''தினையனைத்தே யாயினும் செய்த நன்றுண்டால்
> பனையனைத்தா உள்ளுவா சான்றோர்''

என்று கூறி யிருப்பதை இந்நூலில் எடுத்துக் காட்டி யிருக்கிறது.

இத்தகைய ஒப்புவமை யில்லாத தமிழ்ப்பெருந் தொண்டைத் தருமபுர ஆதீனத்தின் சார்பாகச் செய்து முடித்தவர் தமிழ் வித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் ஆவர்

இப்பெரியாரையும் அவருடைய தமிழ்த் தொண்டையும் மனமாரப் பாராட்டுகிறோம் இவருக்கு ஊக்கமளித்து ஆதரித்து இவருடைய தமிழ்த் தொண்டைத் தமிழுலகத்துக்குப் பயன்படுமாறு தந்த தருமபுரம் ஆதீனத் துக்குத் தமிழ் அன்பர்களின் சார்பாக மனமார்ந்த நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிய சட்ட திட்டங்களின்படி மடாலயங்களின் நிர்வாகம் எப்படி யெல்லாம் மாறிய போதிலும், இத்தகைய அரும்பெரும் தமிழ்த் தொண்டு களைச் செய்வதற்கு இடையூறு ஒன்றும் நேரிடாமல் இருக்குமாக.

கூழிற்குக் குற்றேவல் செய்யும் என அறிக. நட்பு - நட்பு உடையன், அவற்குத் தமன் என்பன. பகை - மக்கட்குப் பகை பாம்பு, அவற்குப் பகை மாற்றான் என்பன. காதல் - நட்டார்க்குக் காதலன், தாய்க்குக் காதலன் என்பன. சிறப்பு - வடுகரரசர்க்குச் சிறந்தோர் சோழிய அரசர், கற்பார்க்குச் சிறந்தது செவி என்பன.

அதற்கு வினையுடைமை முதலாகக் கூறப்பட்டன எல்லாம் முன்கூறிய கொடைப் பொருளின் பாகுபாடு அல்ல. பிறபொருளென அறிக. அவற்றுள், அதற்குடம் படுதல், அதற்குப் படுபொருள் என்னும் இரண்டும் கொடைநீர்மையும் சிறிதுடைய.

உம்மையால் பிறவும் அதன்பாலுள. பண்ணிற்குத் தக்கது பாட்டு, பூவிற்குத் தக்கது வண்டு என்பனபோல வரும்; பிறவும் அன்ன.

உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை யாகலான் இந்திகரன கோடற்கு உடம்படாதா லெனின், இறந்தது தழீஇய அதனையே இரட்டுறமொழிதல் என்னும் ஞாபகத்தினான் எதிரது தழீஇயதூஉமாகக் கூறப் பட்டது எனக் கொள்க. (கச, கரு,)

ஐந்தாகுவதே
இன் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது என்னும் அதுவே. 78

வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்றா
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை என்றா
முதுமை இளமை சிறத்தல் இழித்தல்

புதுமை பழமை ஆக்கம் என்று
இன்மை உடைமை நாற்றம் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதலென்
றன்ன பிறவும் அதன்பால என்மனார். 79

என் - எனின், நிறுத்த முறையானே ஐந்தாம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஐந்தாம் முறைமைக்கண்ணதாகிய இன் என்னும் பெயரையுடைய வேற்றுமைச்சொல இப் பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் என வரூஉம் பொரூஉப்பொருளினைத் தனக்குப் பொருளாக உடைத்து; அது வருமாற்றை விரிப்பின், வண்ணம் முதலாகப் பற்றுவிடுதல் ஈறாகச் சொல்லப்பட்ட இப் பொருண்மைகளும் பிறபொருண்மைகளும் அவ்வைந் தாவதின் கூற்றன என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

இனி ஐந்தாவது பொரூஉப்பொருளும், நீக்கப் பொருளும, எல்லைப் பொருளும, ஏதுப்பொருளும் என நால்வகைய. அவற்றுள். பொரூஉப் பொருள் சிறப் புடைமையின் முன்னெடுத்து ஓதப்பட்டது. பொரூஉ என்பது ஒன்றை ஒன்றின் மிகுத்துக கூறல். இதனின் ஒழிவாகிய உவமமும் இரட்டுறமொழிதல் என்னும் ஞாபகததான் ஈண்டே கொள்ளப்படும். நீக்கம உதா ரணப் பகுதி கூறுகின்றவழிக் கொள்ளவைத்தார் என்பது. எல்லையும ஏதுவும அன்ன பிறவால் கொள்ள வைத்தார் என்பது.

உ - ம்: காக்கையிற்கரிது களம்பழம் என்றாற் போல்வன. இதனின் என்பது காககையின் என்பது. இற்று என்பது கரிது என்பது. இது என்பது களம் பழம் என்பது. என்றது காககையினுங் கரியது களம்

பழம் என்று மிகுத்துக கூறியவாறுயிற்று. உவமத் திற்கும் இதுவே உதாரணமாம். காக்கையைப் போலக் கரிது களம்பழம் என்றவாறும்.

இனி வண்ணமென்பது ஐந்து வகைப்படும். கருமை முதலியன. காக்கையிற் கரிது களம்பழம் என்றாற் போல்வன. வடிவு என்பது முப்பத்திரண்டு வகைத்து. அவை வட்டஞ், சதுரம், கோணம முதலியன. இத னின் வட்டமிது என்பது. அளவு - நெடுமை, குறுமை, நீளம் எனப் பலவாம். இதனின் நெடிது இது என்பது. சுவை - அறுவகைப்படும் அவை கைப்பு முதலியன. இதனின் தீவிது இது என்பது. வெம்மை - இதனின் வெய்யது இது எனபது. அச்சம - கள்ளரின் அஞ்சும என்பது. இஃது ஏதுவினகண் வரும. நன்மை - இதனின் நன்று இது என்பது. தீமை - இதனின் தீது இது என்பது. சிறுமை - இதனின சிறிது இது என்பது. பெருமை - இதனிற் பெரிது இது என்பது. வன்மை - இத னின் வலிது இது என்பது. மென்மை - இதனின்மெலிது இது என்பது. கடுமை - இதனின கடிது இது என்பது. முதுமை - இதனின் மூத்தது இது எனபது இளமை - இவனின் இளையோன் இவன் என்பது. சிறத்தல் - இவனிற் சிறந்தவன் இவன், இதனிற் சிறந்தது இது என்பன. இழித்தல் - இவனின் இழிநதவன் இவன், இதனின் இழிந்தது இது என்பன. புதுமை - இவனிற் புதியன் இவன், இதனிற் புதிது இது என்பன. பழமை- இவனிற் பழையன் இவன், இதனிற் பழையது இது என்பன். ஆக்கம-இவனின் ஆயினுன், வாணிகத்தின் ஆயினுன் இவன் என்பன. இது ஏதுப்பொருட்கண் ணும வரும. இன்மை-இவனின் இலன் இவன் என்பது. உடைமை - இவனின் உடையன் இவன் என்பது. நாற்றம் - இதனின் நாறும் இது என்பது. இவை யெல்லாம பொரூஉப் பொருளாம. தீர்தல் - ஊரிற்றீர்ந்

தான் என்பது. பன்மை - இவரிற்பலர் இவர், இதனிற் பல இவை என்பன. சின்மை - இவரிற் சிலர் இவர், இதனிற் சில இவை என்பன. இவையும் பொரூஉப் பொருளவாம். பற்றுவிடுதல் - ஊரிற் பற்றுவிட்டான், காமத்திற் பற்றுவிட்டான் என்பன. இவை நீக்கம். மருவூரின் மேற்கு, கருவூரின் கிழக்கு என்பன எல்லைப்பொருளவாம். முயற்சியிற் பிறத்தலின் இசை நிலையாகாது என்பது ஏதுப் பொருளது.

அன்ன பிறவும் என்றது எடுத்தோதின பொரூஉப் பொருளின் பாகுபாட்டினும் நீக்கப்பொருளின் பாகுபாட்டினும, ஒழிந்தவற்றிற்கும், பிற பொருட் பாகுபாட்டிறகும் புறனடை என உணர்க. (கசு, கஎ)

ஆறாகுவதே
அது எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதனது இது எனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே. 80

இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்
செயற்கையின் முதுமையின் வினையின் என்று
கருவியின் துணையின் கலத்தின் முதலின்
ஒருவழி உறுப்பின் குழுவின் என்று
தெரிந்துமொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியின்
திரிந்து வேறுபடூஉம் பிறவும அன்ன
கூறிய மருங்கில் தோன்றுங் கிளவி
ஆறன் பால என்மனார் புலவர். 81.

என் - எனின், நிறுத்த முறையானே, ஆறும் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஆறும் எண்ணுமுறைக்கண்ணதாகிய அது என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல், தன்னொடு தொடர்ந்ததோர் பொருளையும் தன்னின் வேறாகியதோர் பொருளையும், இதனது இது என்னும் கிழமை செப்பிநிற்றலை இலக்கணமாக உடைத்து; வருமாற்றைச் சொல்லின், இயற்கை என்பது முதலாகத் திரிந்து வேறுபடுதல் ஈறாக ஓதப்பட்ட பொருட் பாகுபாடுகளும், பிறவும் 'அதன்மை தன்னினும்பிறிதினும்' என ஓதிய இருவகையிடத்து வரும பாகுபாடுகளும் அவ் ஆறுமவேற்றுமைக் கூறறன என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

'இதனதிது என்னுங் கிளவி' என்றது 'அன்ன' என்றதனன் அஃறிணை யொருமை தோன்றவரும் அது என்பதன் அஃறிணைப் பன்மை தோன்றவருவதோர் அகரஉருபும உணடென்று கொள்ளப்படும. அஃதேல் அவை அஃறிணை இருபாற்கும உரிய உருபாயின் அவ்வாறு போல, உயர்திணை முப்பாற்கும உரியவுருபு கூறுரே எனின், அவ்வாறு வரும வழககின்மையின் கூறுராயினர் என்பது.

நமன், நமள், நமர் என்பனவறறுள் அன், அள், அர் என்பன உயர்திணை உருபன்றே எனின், பிறவுருபு போலத் தொகுததலும விரிததலும இன்மையானும, தற்கிழமையும பிறிதின்கிழமையும என்னும இரண்டிடத்தும் வாராமையானும, மறறைப் பெயருமஉருபும ஆகக்கொள்ளாத ஆறும் வேறறுமைத தொகைச்சொற் போல இரு பொருணிலைமைத தொரு சொல்லென எச்ச வியலுள கூறுகினறூர் என்பது. அஃதேல் உயர்திணைப் பொருளை யுடைமை செப்புமாறு என்னை எனின், அதற்கு மேல் வருகின்ற ஓத்தினுள், 'அது என் வேற்றுமை' எனபுழிக் கூறுவர் என்பது. தன்னினும் என்புழிக் கிழமை ஐந்துவகைப்படும, அவை ஒன்று பல

குழீ இய தற்கிழமையும்,வேறுபலகுழீ இயதற்கிழமையும், ஒன்றியற் கிழமையும், உறுப்பின் கிழமையும், மெய்திரிந் தாகிய தற்கிழமையும் என. பிறிதின் கிழமை இது போலப் பகுதிப்படாது என்க. ஒன்று பல குழீ இயது - எட்குப்பை, எண்ணது குப்பை என்றவாறு. வேறு பல குழீ இயது - படைகுழாம. ஒன்றியற் கிழமை - நிலத் ததகலம, சாத்தனதியற்கை. உறுப்பின் கிழமை - யானையது கோடு,புலியதுஉகிர். மெய்திரிந்தாகியது-எட் சாந்து. பிறிதின் கிழமை - சாததனது தோட்டம் என வரும். இனிஅவ்விருகிழமையும் ஒட்டுமாறு.

இயறகை - சாத்தனதியற்கை. இது நாற்கிழமையுள் ஒன்றியதறகிழமை. உடைமை-சாத்தனதுடைமை. இது பிறிதின் கிழமை; தற்கிழமையும படுமபோலும. முறை மை - ஆவினது கனறு. இது பிறிதின்கிழமை. கிழமை - சாத்தனது கிழமை. செயற்கை - சாத்தனது செயறகை: இவ்விரணடும தற்கிழமை, ஆகுபெய ராயவழிப பிறிதின கிழமையுமாம. முதுமை - அவனது முதுமை இது தற்கிழமை. வினை - சாததனது வினை. இதுவும ஆகுபெயராயவழிப் பிறிதின கிழமையுமாம். கருவி - சாத்தனது வாள; இதுபிறிதின கிழமை துணை - சாத்தனது துணை; இதுவும் அது. கலம - சாததனது கலம்.; கலம எனபதனை யொற்றிக்கலத்தின் மேற் கொளக பிறகலததினமேற கொளளாமைக காரணம் என்னை எனின, இஃதொரு பொருள இருவற குடைமை யாக நிற்கும, வேறுபட்டதாகலின என்க. இஃது உரையிற கோடல. இதுவும அது. முதல் - சாத்தனது முதல் இத்தோட்டம என ஓர்க. இதுவும் ஓர் உடைமை வேறுபாடு எனக கொளக. இதுவும அது. ஒருவழி யுறுப்பு - யானையது கோடு. உறுப்பு என்னது ஒருவழி யுறுப்பு என்றது ஒருறுப்பினையுடைமையாகக கருதாது பலவற்றையுங் கருதி உரிமையாகாத பொருடானும்

என்பது போலும் இது தற்கிழமையுள் உறுப்பின் கற்கிழமை. குழூஉ - எட்குப்பை, படைகுழாம் என்பன. இவை தற்கிழமையுள் ஒன்றுபலகுழீஇயதூஉம் வேறுபல குழீஇயதூஉம் ஆம். குழூ என்பது உடலநோக்கிற்று. தெரிந்துமொழிச் செய்தி - கபிலரது பாட்டு; இதுவும பாரியது பாட்டு எனவுமநிற்றலின் இரு பொருட் குரிமையாம. கபிலரது என்புழி மெய்திரிந்தாகியதன்பாற்படும, பாரியது என நிற்புழிப் பிறிதின் கிழமையாம். நிலை - பெண்ணாசத்துப் பெருஞ்சங்கரனாரது நிலை. இஃது ஒன்றியதற்கிழமை. வாழ்ச்சி - சாத்தனது வாழ்ச்சி; இது வாழ்தல் என்னும் தொழில் கருதினவழித் தற்கிழமை. வாழும் இடம் கருதியவழிப் பிறிதின கிழமையாம் திரிந்து வேறுபடுவன - எட்சாந்து, கோட்டு நூறு என்பன. சாத்தனது சொல் என்பதும் பிறவும் ஒரு பொருள் முழுவதூஉம திரியாதன. பரணரது பாட்டியல என்றாற் போல வருவன எல்லாம உதாரண வாய்பாடாக எடுத்தோதாது திரிந்து வேறுபடும எனப் பொதுப்பட ஒருபொருண்மையாக எடுத்தோதினமையிற் கொள்ளப்படும. பிறவும என்றதனால சாத்தனது வனப்பு, சாத்தனது ஆண்மை, சாத்தனது நடை, சாத்தனது புத்தகம எனவரும. பிறவும அன்ன. (கஅ, ககூ,)

ஏழாகுவதே
கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே. 82

கண்கால் புறமகம் உள்உழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை எனாஅ
முன்இடை கடைதலை வலமிடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார். 83

என் - எனின், நிறுத்த முறையானே ஏழாம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஏழாம் எண்ணுமுறைக் கண்ணதாகிய கண் என்னும் பெயரையுடைய வேற்றுமைச்சொல் வினை செய்யிடமும், நிலமும், காலமுமாகிய மூன்று பொருட் கண்ணும் வரும். அதன் உருபு வரும் பாகுபாட்டைச் சொல்லின் கண் என்னும் உருபு முதலாய் புடை என்னும் உருபு ஈறாக ஓதப்பட்ட உருபுகளும், இடையே தே, வகை என ஓதிய திசைக்கூற்றுப் பொருண்மையும், பின்னரும் முன் என்னும் உருபு முதலாக இடம் என்னும் உருபு ஈறாக எடுத்தோதப்பட்ட உருபுகளும் அத்தன்மைய பிற உருபுகளும் அவ்வேழாவதன் கூற்றன என்றவாறு.

வினைசெய்யிடம் - வினைசெய்யா நிற்றலாகிய இடம். வினைசெய்நிலம் - ஒரு தொழில் நிகழாது வரையறை யுடையதோர் இடம். காலம் என்பது ஒரு தொழில் நிகழ்தற்கு இடமாய் வரையறைப்பட்டு நிற்பது. இம் மூன்றன் கண்ணும் ஏழாவது வருமிடத்து இடமும் இடத்துநிகழ் பொருளும் வேறுபட வருவனவும், வேறு படாமல் வருவனவும் என இருவகைய.

உ - ம் வினைசெய்யிடம்-தட்டுப்புடையுள் வந்தான், தட்டுப்புடையுள் வலியுண்டு. நிலம்-குன்றத்துக் கூகை, குன்றத்துக்கண் குவடு, ஆகாயத்துக்கண் பருந்து. காலம் - மாரிக்கண் வந்தான், மாரிக்கண் நாள் என வரும். கண் - ஊர்க்கண் இருந்தான், கால் - ஊர்க்கால் இருந்தான். அகம் - மாடத்தகத்து இருந்தான். உள் - ஊருள் இருந்தான். உழை-சான்றோருழைச் சென்றான். கீழ் - மாடத்துக் கீழ் இருந்தான். மேல் - மாடத்து மேல் இருந்தான். பின் - ஏர்ப்பின் சென்றான். சார் - காட்டுச்சார் ஓடுங் களிறு. அயல் - ஊரயல் இருந்தான்.

செஞ்ச ரண்கொடே வலியுற வூன்றியுஞ் செயிர்த்தே
வஞ்சி யோடுபோர்க அருத்தநிட் கிராதனுப் மன்ன
நஞ்ச மன்னகட் கத்தினு லவன்றலை நாரி
விஞ்சு பாரிடை வெட்டியே வீழ்த்தினண் மன்னே.

கு - ரை:- செஞ்சரண்கொடு - தேவி தன்னுடைய சிவந்த பாதங்களினல். வலி உற ஊன்றியும - அசுரவுருவம பாதிக்கு மேல் வெளிப்படாதபடி வலிமை பொருந்த மிதித்தும. செயிர்த்து - கோபித்து. வஞ்சியோடு - தேவியுடனே. அருத்தம் - அசுரவுடலிற் பாதி. நிட்கிராந்தனுய் - வெளிப்பட்டவனு யிருந்துகொண்டே. போர் மன்ன - மகிடன் போரைப பொருநதவும்; செயயவும. நாரி - தேவியானவள். கட்கத்தினுல் - தனது வாளினுல். விஞ்சுபார் - மேலானபூமி. அவன்தலை - அம்மகிடனது எருமைத் தலையை. மன் ஓ அசைநிலைகள்.

வி - ரை.- தேவி அசுரவுருவம பாதிக்குமேல் வெளிப் படாதபடி மிதித்துத் தடைசெய்தும, மகிடன் வெளிப்பட்டபாதி உடம்புடனிருந்து கொண்டே தேவியுடன் போரைச செய்யவும தேவி அவனது எருமைத்தலையை வெட்டிப் பூமியில் தள்ளினுள். பார - யுத்தபூமி. 24

அந்த மாமகி டன்பல மாவெனக கதறி
நொந்து பூவிடைப் பாறலு நோககியே நுவலுஞ்
சுந்த ரஞ்செறி தேவருங் கணங்களுந் துறவோர்
முந்து சங்கமு மகிழ்வொடும் தோத்திர மொழிந்தார்.

கு - ரை:- பலம் - சேனைகள். ஆ என - ஹா என்று. பூ இடை - பூமியில். பாறலும - அழியவும. தேவரும் - பிரமா முதலிய அதிகார தேவதைகளும. கணங்களும - மற்றுமுள்ள தேவர்களின் கூட்டமும. துறவோர் - முனிவர்களின். சங்கமும - கூட்டமும்.

வி - ரை:- தங்களுக்குத் துன்பம் செய்த மகிடனும் அவனுடைய சேனைகளும் தேவியினால் அழிக்கப் பெற்றதினால் உண்டாகிய மகிழ்ச்சியினால் தேவியைத் துதித்தார்கள். 25

கானங் கந்தரு வர்புரிந தார்மணங் கமழு
நானங் கநதரஞ் செறிந்திடு மரம்பையர் நடித்தார்
ஆன தன்மையின் மூன்றெனுஞ் சருககமு மறைந்தேன்
மேனி கழுந்திடு மமமைதன் பெருமபுகழ விரிப்பேன்.

கு - ரை:- கநதருவர் - காநதருவர்; இவர் தேவசாதியினருள் ஒருவகையினர். கானம புரிந்தார் - இசையை விருமபிப் பாடினர். நானம - கத்தூரி. கநதரம - கூந்தலில்; உவமையாகு பெயர். செறிந்திடும் - செறிநதுள்ள. அரமபையர் - அரமபை, ஊர்வசி, திலோத்தமை ஆகிய தேவமாதர். நடித்தார் - நடனம செய்தார் 26

மூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

4 தேவர்கள் தேவியைத் தோத்திரஞ்செய்ததுரைத்த அத்தியாயம்.

இன்ன வாறுமை மகிடனை முடித்தமை யெண்ணிப்
பொன்னி னட்டிறை தன்னொடு தேவரும் போந்து
கன்னிபா தத்திற றலையிறக கிட்டனர் கடத்திற்
றுன்னு நற்புள கதமொடுந் துதிபல சொற்றூர்.

கு - ரை:- உமை - தேவியானவள். முடித்தமை - அழித்தமையால. எண்ணி - தங்கள் துன்பம் தீர்ந்ததென்று நினைநது. பொன்னின்நாடு - பொன்னுலகம, சுவர்க்கம. இறைதன் ஒடு - தேவேநதிரனுடன். போந்து - போய். கன்னி - தேவி. தலை இறக்கிட்டனா - தலைகுனிநது வணஙகினார்கள கடம - உடமபு. துன்னும - நிறைநத. நல்புளகம - நல்ல மயிர்ககூசசல். துதி - தோத்திரமொழி. பலசொறறூா - பலவாகசசொன்னார்கள்.

வி - ரை - இச்செய்யுள் தோத்திரவாலாறு கூறுவது. தேவர்களின் தோத்திர மொழிகளே இவவத்தியாயத்திலுள்ள தோத்திரங்கள நற்புளகத்தோடும துதிபல சொற்றூர் என்றமை யின் மிகுந்த மகிழ்சசியோடு தோத்திரஞ் செய்தாரென்றவா றாயிற்று. 1.

அகில மாஞ்சுரர் கணவலி யவையின் மூர்த்தியெனும்
விகல மின்றிய நாயகி தன்மிட லாலிவ்
வகில மாகுவ ளமரரு முனிவரு மன்பால
நிகரில் பூசனை புரிந்திட நேயமுற் றிடுவள்.

கு - ரை:- அகிலம ஆம் சுரர்கணம - எல்லாத் தேவ கூட்டங்களினுடைய. வலி அவையின் - சகதிக்கூட்டங்களினு லாகிய. மூர்த்தி - வடிவமுடையவள. "நிச்சேஷ தேவகண சகதி சமூக மூர்த்தியா" வடநூல் விகலம - குறைவு நாயகி - தேவியானவள், மிடல் - வலிமை. இவ அகிலம : இந்த உலகத்தை. நேயம - விருப்பம்.

வி - ரை:- எலலாத்தேவர்களுடைய சக்திக்கூட்டமே தேவி என்பதை இரண்டாமததியாயத்தில காண்க. இவளை உபாசனை செய்தால் எல்லாத தேவதைகளையும உபாசனை செயவதனுல் உண்டாகும பயன்கள் உணடாகின்றன. 2.

அனையள பாததனை வணங்கின மடியர்கட் கிடும்பை
வினையு றுவகை மங்கலை மங்கலம விளங்க
நனிய ளித்திடக கடவளு யகிபிர பாவம்
பனம லர்ப்பக வன்னர னனாநதனுற படுமோ.

கு - ரை:- அடியவர் - வழிபாடு செய்யும் அடியார்கள். இடுமபைவினை - துன்பம்தரும் தீவினைகள். உறுவகை - உண்டா காதபடி. மங்கலை - மங்களமுடையவள (தேவி) 'சர்வமங்களா' வளி, நாமம. மங்கலம விளங்க - நன்மைகள் விளங்குமபடி. அளித்திட கடவுள் - காப்பாற்றத் தக்கவளாவாள். பிரபாவம -

பெருமை. பனமலர் - தாமரைப்பூ. பகவன் - பிரமன். அரன் - சிவன். அனந்தன் - ஆதிசேடன், திருமால் எனினுமாம். படுமோ - சொல்லமுடியுமோ, "ஆதிசுந்தரிவடிவினை யயன்முதற் புலவோர், ஏது கண்டளவிடுவது" ஆனந்தலகரி. 12. செ.

வி - ரை:- இதனால் தேவர்கள் தேவியே அடியார்களைத் துன்பங்களணுகாமல் காப்பவள் என்றும் அவள் பெருமை சொல்லுதறகரியதென்றும தேவியின் பெருமை தெரிவித்தவாறாயிற்று. 3.

காத்தி யாயனி யாகிய தேவிகாத் தருள்க
ஏதது லோகபா லனத்தினு மசுபச்சூ ரிறவும்
மாத்தி றங்கொளுஞ் சணடிகை மனதுவைத்தருள்வாய்
தோத்திரம் பெறுஞ் சீயதாய்ச் சுகிர்திமந் திரத்தில்.

கு - ரை:- காத்தியாயனி - கத்தியயன முனிவரின் ஆசிரமத்தில் வளர்ந்தவள். லோகபாலனத்தினும - உலகங்களைக் காபபாற்றுவதன் பொருட்டும, அசுபம சூர் - கெடுதலைப்பற்றிய பயங்கள். இறவும - அழிவதன் பொருட்டும, சண்டிகை - சண்டிகாதேவியே; சுகிர்தி - நல்லகருமங்களைச செய்பவருடைய. மந்திரத்தில் - வீடுகளில். சீ - ஸ்ரீசம்பத்தைத் தரும இலக்குமி.

வி - ரை:- தேவியானவள் தங்களைக் காப்பாற்றவேண்டுமென்றும, சண்டிகை யென்னும பெயருடைய அத்தேவியே உலகத்தைக் காப்பாறறுவதிலும பயங்களைப் போக்குவதிலும அருள்செய்ய வேண்டுமென்றும தேவர்கள் அவளருள்வேண்டியவாறு தெரிவித்தது இச்செயயுள் என்க. 4

பாவர் மந்திரந் தன்னிடை மூகடியாய்ப் படர்ந்து
மேவு நூலுணர் பண்டித ருளம்புத்தி விளக்காய்த்
தேவ ரும்புகழ் புண்ணிய ருளிற்சிரத் தையதாய்ப்
பாவு சற்குலப் பிறப்பினர் பாற்பகர் நாணாய்.

கு - ரை:- பாவர் மாதிரம் தன் இடை - பாவசசெயல் புரிபவர்களின் வீடுகளில். முகடி - அலட்சுமி; வீட்டின் முகட்டி லிருப்பவன் படர்ந்து - சென்று. பணடிதா உளம - பண் பாடுடையவர்களின் உள்ளத்தில். புத்தி விளககு ஆய - சுவாக்க மோட்ச சாதன ஞானதீபமாகியும். புணணியர் - நற்செயல் புரிபவர்களுடைய. உள்ளில் - மனத்தில். சிரத்தை - வேதாகமங் களில் சொல்லபபடடுள்ளவைகளில் நமபிககை. சற்குலப் பிறப் பினர்பால - நல்ல குலத்தில் பிறநதவரிடத்தில இருககின்ற. நாண் - வெட்கம்; தகாத காரியங்களைச் செய்வதில் வெட்கம்.

வி - ரை:- முகடி வறுமைத் தெய்வம. புத்திவிளக்கு உருவகம. சிரத்தை ஆஸ்திகபுத்தி. நாண என்பது செய்யக் கூடாத காரியத்தில் முயலாத இலக்கணத்தையுடைய அநதக கரணவிருததி விசேடம என்பா. சீ, முகடி, புததி, சிரத்தை, நாண், என்பன தேவியின் வடிவபேதங்களாம. சநதககளிடத்தி லுள்ள புத்தி சிரத்தை நாண் ஆகியவெல்லாம தேவியின் உருவங்களேயாம. 5

கின்ன நீககிய நினறிரு வடிககென்றுங் கெடாத
மனனு சீர்நமம் புரிநதனம் மாயையி னுதித்த
வின்ன லோகபா லனஞ்செய்வா யெமபெரு மாட்டி
துன்னு நின்னுரு வசிந்தியஞ் சொற்றிடும் வீரம்.

கு - ரை:- கின்னம - கீழ்மைத்தன்மை. உபத்திரவமும் ஆம். சீர் நமம - சிறபபாகிய வணக்கம. மாயையின் - பிரகிருதி எனனும மாயையிலிருநது. இன்னலோகம - இந்த உலகத்தை. பாலனம் - காப்பாற்றுதலே. நின உரு - உனது வடிவமும. அசிந்தியம - (இப்படிப்பட்டதென்று) சிந்திகக முடியாதது. சொற்றிடும் - சொல்லப்படுகின்ற, வீரம - வீரத்தையும்.

வி - ரை:- உலகம பிரகிருதிமாயையினின்றும தோன்று மென்பதனை "தோறறமும நிலையும ஈறும மாயையின தொழில தென்றே சாறறிடு முலகம" எனவரும சிவஞானசித்தியாரினும,

"எல்லாப் பொருளுந தோன்றுதற் கிடனெனச சொல்லுதன் மூலபபகுதியாகும்" எனவரும மணிமேகலையானும் உணர்க தேவி மனதால்நினைபபதற்கும இயலாத நுண்ணுருவமுடைய வளாதலின "நின்னுரு வசிநதியம" என்றனர் தேவர் என்க. வீரத்தையும சமர்ததிறத்தினையும் எவவணம சாறறுதல் என அடுத்தகவியிற கூட்டுக 6

சமர்த் திறத்தினை யெவவணஞ சாற்றுத லுமையே
எமைப்பு ரந்திட நின்பத மிறைஞசின மமமே
அமர்ச கத்தினுக கேதுவாய்ச் சருவவா சிரய
விமலை யேதிரி குணவடி வாய்மிளி ரிறைவி.

கு - ரை:- வீரம - அசுரநாசஞ செயவதில் உன்னிடத்து உண்டாகின்ற வீரியத்தையும (பராக்கிரமம) சமர்த்திறத்தினை - அசுரர்களொடு போரிற செயயும உனதுவல்லபச் செயல்களையும சாறறுதல எவ்வணம - எங்களால் சொல்லுவதற்கு எவவாறு இயலும. தேவி, கணணுககுப புலனகும பருவுடல் கொண்டே வீரமும போரும செய்கினறனள் எனினும அவை உவமை சொலல முடியாதனவாயிருத்தலின "எவவணம சாறறுதல் உமையே' என்றனர் என்க.

எமை புரநதிட - எங்களைக காப்பாற்றும பொருட்டு. இறைஞசினம - வணங்கினோம சகத்தினுககு - உலகங்களெல் லாம தோனறுவதற்குரிய ஏதுவாய் - மூலகாரணமாகியும். சருவ ஆசிரயம - எல்லாவற்றிறகும இருப்பிடமாயும உள்ள. விமலை - குற்றமற்றவள. திரிகுணவடிவம - சத்துவம இராசதம தாமதம என்ற முக்குணங்களின் வடிவம. மிளிர் - விளங்குகின்ற. இறைவி - தலைவியே; விளிவேற்றுமை இயலபாயிற்று.

வி - ரை:- சகத்துககு ஏதுவாயும ஆசிரயமாயும திரிகுண வடிவமாயும விளங்குபவள மூலப்பிரகிருதி யென்னும மாயை யாகிய தேவியாம என்க. இவள முக்குணங்களாகிய [illegible]களி னால ஞானிகளுடைய மனத்தையும வலிய இழுதது மயக்கமாகிய

பளளததில் தள்ளுகிறுளென றும, தனது முககுணவடிவததிற்கு ஏற்ப முதசொழிலகளேச செயகின்றுளெனறும, முக்குணங் களின் நிறங்கள் கருபபு சிவபபு வெணமைகளாம என்றும, அந நிறங்களேகொண்டே மகாகாளி மகாலடசுமி மகாசரஸ்வதி என்னும் மூனறுவடிவங்களாக தோணடிருக்கினறனளென்றும், சகல சிவசநதுக்களும முககுணவயப்பட்டவை என்றும நூல களிற சொல்லப்படடிருககின்றன. 7

நித்தி யப்பொரு ளேயரி யரனய னேரின்
மெத்து தேவரு ம்றிநெய்ா ஞ வேதத்தின் றலேவி
சுத்த நின்னுரு வமிசமாஞ் சகமிது துதிசே
ருத்த மீமூதற பகுதியோ டவ்வியா கிருதை.

கு - ரை:- நிததியம - பிறப்பிறப்பின்மை. நேர இல் - சமானமில்லாத. வேதத்தின் தலேவி - வேதத்தை உணடாக்கியவள் "வேதஜனனீ" லளி நா. 338 வேதததில் முதனமையாகச் சொல்லபபடடவளுமாம. சகம இது - இந்தவுலகமானது சுத்தம - சுததப்பிரமமாகிய. நின் உரு - உனது விசுவரூபத்தின. அமிசம ஆம - ஒருபாகம (கூறு) ஆகும. 'விசவரூபா' லளி. நா. 256. உத்தமீ - மேலான தன்மையை யுடையவளே. முதற் பகுதி - மூலபபிரகிருதி; முககுணங்களின் சமநிலேயாக விருபபவள. அவவியாகிருதை - வெளிப்படாமலிருபபவளே.

வி - ரை:- மூலப்பிரகிருதியே உலகங்கள் தோன்றுவதற்குக் காரணமாகவுள்ளது. இதனிடத்தேயிருநது பிரபஞ்சமாகிய காரியம உணடானுலும இது காரணரூபமாக வெளிபபடாமல் இருநதுகொண்டு யாதொரு விகாரத்தையும அடைவதில்லே. காரியம அழிவது காரணம அழியாதது. இநத மூலபபிரகிருதியே தேவியாம. இவளே மகாமாயை எனபவள. இவளே தேவிமான்மிய மென்னும இநநூலிற் சொல்லப்படுகின்றவள். இவள வெளிபபடுவதும வெளிபபடாததுமாகிய இரணடு வடிவங் களேயுடையவள. லளி. நா. 399 "வியக்தாவயக்த சொரூபிணி"

என்பது காண்க. மூலப்பிரகிருதியாகிய தேவியே உலகின் தோற்றத்துக்குக் காரணமென்பது உணர்த்தியவாறாயிற்று. 8

மகத்திற் றேவர்கள் மாண்சுவா கைப்பெய ரோத
மிகத்தி ருத்தியை யுற்றனர் சுவதையை விளம்பி
வகுத்த கன்மத்திற் பிதிர்க்களுந் திருத்திமன் னினரால்
சகத்தி லன்னவை யிரண்டுநீ யன்றியார் சாற்றாய்.

கு - ரை:- மகம் - யாகம். சுவாகைப்பெயர் - சுவாகா என்னும் நாமம். திருத்தி - திருப்தி. சுவதை - சுவதா என்னும் நாமம். பிதிர்க்கள் - பிதிரர்களாகிய தெய்வங்கள். அன்னவை- சுவாகை சுவதா என்னும் அப்பெயர்கள். நீ அன்றி - நீயே யல்லாமல். யார் - வேறியாவர். ஒருவருமலர். சாற்றாய் - இதனை நீயே சொல்வாய்.

வி - ரை:- வேள்வித்தீயில் தேவர்களுக்குக் கொடுக்கும் அவியுணவைத் தேவர்களிடம் சேர்ப்பவள் சுவாஹா என்னும் அக்கினி சத்தியாம்.

வகுத்த கன்மம் என்றது வேதங்களில் நியமிக்கப்பட்டுள்ள பிதிர் தருப்பணம் சிரார்த்த முதலிய கருமங்களேயாம். இக்கருமங்களில் பிதிரர்களிடம் அவ்வுணவைச் சேர்ப்பவள் பிதிர் பத்தினியாகிய சுவதாதேவியாம். இவள் பிதிர்த்தான மந்திரவக்கினியின் மனைவியென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு சக்திகளாகவும் விளங்குகிறவள் தேவியேயாவள். இந்நூலின் முதலத்தியாயத்தில் பிரமனானவன் "ஏண்சுவாகைப் பேரோடு மெழிலுறு சுவதையானாய்" என்று சொல்லித் தோத்திரம் செய்கிறான். இவ்விருநாமங்களும் 'இந்திராயஸ்வாகா' 'விஷ்ணவேஸ்வாகா' 'பித்ருப்ய : ஸ்வதா' ஓம்ஹாம் பிதாபிதருப்யஸ்வதா' 'ஓம்ஹாம் பிரபிதாமகேப்யஸ்வதா' என்று பிரயோகத்தில் வரும் பிதிர்க்களென்போர் தென்புலத்தார். இவர்கள் ஏழுபேர்கள். நால்வர் சரீரமுடையவர்கள். மூவர் ஒளிமயமானவர்கள். இவர்கள் பிரமனால் படைக்கப்பட்ட தேவசாதியைச் சேர்ந்தவர்கள். இவர்களே நம்முடைய முன்னோர்களென்பது நூல்வல்ல அறிஞர்களது அபிப்பிராயம்.

குன்றக்குடியில் பாராட்டுவிழா

6—1—51 மாலை தேவகோட்டை நகராண்மைக் கழகத் தலைவர், திரு. அழ. அரு. சோமநாதன் செட்டியாரவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது. ஆதீனம் சின்னப்பட்டத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி அருணசல தேசிக சுவாமிகள் அவர்கள், பட்டம் ஏற்ற ஒன்றரை ஆண்டுக்குள், அளவிடற்கரிய அரும்பெரும் பணிகள் பல மொழிக்கும், சமயத்துக்கும் செய்து வருவதை அறிஞர்கள் பலர் பாராட்டிப் பேசினர்கள்.

நாகையில் ஆண்டுவிழா

7—1—51ல் நாகை சைவசித்தாந்த சபையின் 62-வது ஆண்டு விழா உயர்திரு. இளவழகனர் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. காலஞ்சென்ற தமிழ்த் தலைவர்களான பாஸ்கரசேதுபதி, மறைமலை அடிகளாகிய இருவர்களின் திருவுருவப்படத் திறப்புவிழாவும் விழாவில் ஒரு பகுதி. மற்றொரு பகுதி பல அறிஞர்களின் தோத்திர சாத்திரச் சொற்பொழிவுகள். இத்தகைய சிறப்புடன் கொண்டாடப்பெற்ற விழாவில் ஆதீனப் புலவர், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களின் "மனிதவாழ்க்கையும் சமயமும்" என்ற தலைப்புப்பேச்சும் நிகழ்ந்தது.

தருமபுரம் குருபூஜை விழாவில் பட்டமளிப்பு

தருமபுர ஆதீனம் இரண்டாவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களின் குருபூஜை விழா 27—12—50ல் நடந்தது. காலை விசேஷ அபிஷேக ஆராதனை. மாலை நான்கு மணிக்கு ஆதீனக் கல்லூரி கௌரவப் பேராசிரியர், வித்வான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். பாடசாலை மாணவர்களின் தேவார பாராயணமும் நடந்தது. இரவு 7-மணிக்கு ஆதீனப் பாடசாலையில் முறையே பயின்ற, (அண்ணமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரி இறுதிவகுப்பில் வாசித்துவரும்.) திரு. P. சுவாமிநாதன் அவர்களைக் கொண்டு தக்க பக்கவாத்தியங்களுடன் இன்னிசைக்கச்சேரி நிகழ்த்து விக்கப்பெற்றது. அம்மாணவரின் தேவார இன்னிசைத் திறத்தினைப் பாராட்டிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் இரவு வழிபாட்டின்பின் ஆனந்தபரவசரின் சந்நிதியிலேயே **தேவார இசைமணி** என்ற பட்டத்தை அருளி ஆசியுடன் அருட்பிரசாதம் வழங்கினர்கள்.

Regd. No. M. 4454. GNANASAMBANDAM

திருவிடைமருதூரில் மகாநாடு

எந்த ஆண்டிலும் இவ்வளவு சிறப்பாக நடந்திருக்கமுடியாத ஒரு பெரிய மகாநாடு இந்த ஆண்டில் – இம்மாதத்தில் நடைபெற்றது. மாதத்தொடக்கத்திலிருந்தே விடியற்காலையில் நாடோறும் நடைபெறும் திருவெம்பாவை, திருப்பாவை பாராயண ஓசை தூங்குகின்ற மக்களையுங்கூடக் கிளப்பிவிடும். பாராயணத்திற்குக்கூட வீட்டிற்கு ஒவ்வொருவர் தவறாது நீராடித், தூய்மையுடன்வந்து கலந்துகொள்ள வேண்டும் என்பது ஆசாரியசுவாமிகள் அருளாணை. இந்நிலையில் மகாநாடும் நடைபெற்றிருக்கிறது. மார்கழி 10-ந்தேதிமுதல் 17-ந்தேதிமுடிய எட்டுநாளும் திருவெம்பாவை, திருப்பாவை, திருமுறை, நால்வேதம், ஆறங்கம் இவ்வளவு பொருள்களைப்பற்றி மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் சிறந்த அறிஞர்கள் பலர் பிரசங்கம்செய்தார்கள். முதல்நாள் காலை யானையின்மீது எட்டுச்சுவடிகளை எழுந்தருளச் செய்வித்து ஊர்வலமாகக் கொண்டுவரப்பெற்றது மகாநாடு ஆரம்பத்தில் திரு. M. L M. மகாலிங்கம் செட்டியாரவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். தலைவர் ஸ்ரீமத் சச்சிதானந்த சுவாமிகளவர்களின் முன்னுரை முதன்மையுரையாகவே இருந்தது. தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அனுப்பிவைத்த ஆசியுரை, ஆதீனப் புலவரால் வாசிக்கப்பெற்றது அச்சிட்ட அவ்வுரை அன்பர்களுக்கும் வழங்கப்பெற்றது. ஆதீனச் சார்பில் ஆதீனப் பாடசாலை தேவார ஆசிரியர், திரு. R. வேலாயுத ஓதுவார் அவர்களும், ஆதீனப் புலவர், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும் சென்றிருந்தார்கள். ஆதீனப் புலவர் திருவெம்பாவைக் கருத்தை விளக்கி அரிய சொற்பொழிவும் நிகழ்த்தினார். ஆதீன ஓதுவாமூர்த்தி திருவெம்பாவையின் முதற்பத்தை பலவேறு பண்களில் பாடி இன்புறுத்தினார்.

இடையிடையே அரியக்குடி, பிர்மஸ்ரீ. இராமாநுஜஐயங்கார் அவர்கள் போன்ற பிரபல சங்கீத வித்துவான்களின் இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெற்றன. இளைஞர்களுக்கு இசைப்போட்டிப் பரீக்ஷையும் நடந்தது. தேர்ந்தவர்கள் பரிசுபெற்றார்கள். மொழி வேற்றுமை, சமயவேற்றுமைகளை உண்டாக்கி விதண்டாவாதம்பேசித் திரியும் மக்களையும் நல்வழிப்படுத்தவேண்டும் – அவர்கள் வேறுபாட்டுணர்ச்சியை விட்டுச் செம்பொருளைக்கண்டு மகிழவேண்டும் என்ற ஒரு பெருநோக்குடன் இத்தகைய சிறந்த மகாநாட்டைக் கூட்டுவித்த ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளவர்களை உலகம் பாராட்டாமலிருக்க முடியுமா ?

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayavaram) 9—1—1951